விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 19 புதன்கிழமை (04.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 016

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இந்தியாவின் கிருஸ்ணா என்ன அமெரிக்காவின் ஒபாமா வந்தாலும்

# அதிகாரப் பகிர்விற்கு இடமில்லை

## அடம்பிடிக்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

**(கொழும்பு), இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா மட்டுமல்ல; அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வந்தாலும் இலங்கையில் அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.**

அத்துடன் 13-வது திருத்தச் சட்டத்தில் இருந்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை இல்லாது ஒழிக்க விரைவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றபோதே கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அரசாங்கம் அரசியல் தீர்வு விடயத்தில் பாரிய சிக்கல்களில் மாட்டிக் கொண்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் உள்வீட்டுச் சதியாகும். அரசில் உள்ளவர்களில் 60 வீதமானவர்கள் சூழ்ச்சிக்காரர்கள்.

அரசியல் தீர்வுக்கு அதிகாரப் பகிர்வை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசியல் அமைப்பில் இருந்து 13-வது திருத்தச் சட்டத்தை அப்புறப்படுத்த வேண்டும். நாட்டில் இனவாதம் உள்ளது என்பது போலியான மாயை ஆகும். எனவே தேவையற்ற விடயங்களை பேசுவதில் பயனில்லை.

இன்று நாட்டை பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிட ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல சக்திகள் செயற்படுகின்றன.

13வது திருத்தச் சட்டத்தை மையப்படுத்தி சர்வதேச நாடுகள் அழுத்தங்கள் கொடுக்க ஆரம்பித்துள்ளன என கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார கூறுகையில், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா வருகைக்கு அரசாங்கம் அனுமதியளிக்கக்கூடாது. இலங்கையில் இனவாதத்தை ஏற்படுத்தி மீண்டும் தமிழ் மக்களை அழிவிற்குள் தள்ளி விடவே இந்தியா முயற்சிக்கின்றது.

நாட்டில் அதிகாரப் பகிர்விற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் அழிவிற்கும் பின்னடைவுகளுக்கும் இந்தியாவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புமே பொறுப்பு கூறவேண்டும்.

இந்தியாவின் வெளியுறவு அமைச்சரான எஸ்.எம். கிருஸ்ணா அடுத்த வாரத்தில் இலங்கை வரவுள்ளார். இவரின் வருகையின் பின்னணியில் இலங்கைக்கு ஆபத்தான விடயங்களே உள்ளன.



வடக்கு புகையிரதப் பணிகளை பார்வையிடுவதற்காக என்று கிருஸ்ணா இலங்கை வந்தாலும் இந்தியாவின் நோக்கம் அதுவல்ல. நாட்டில் இனவாத பேச்சுக்களை ஆரம்பித்து மீண்டும் தமிழ்-சிங்கள உறவை முறிப்பதே குறிக்கோளாகும் என்றார். (பா-11)

### போர் அனுபவ கருத்தரங்கு இம்முறை பெருமெடுப்பில்

(கொழும்பு)

தீவிரவாதத்தை தோற்கடித்த இலங்கையின் அனுபவங்கள் என்ற போர்க் கருத்தரங்கை இந்த ஆண்டிலும் பெரியளவில் நடத்தவுள்ளதாக இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

### பெறுபேற்றில் குளறுபடி; மூன்று பேரே காரணம்


(கொழும்பு)

பரீட்சைகள் திணைக்களத்தின் தரவுத் தளத்தில் தரவுப் பதிவு இயக்குநர்கள் மூவர் ஒரே பெறுபேற்றை உட்புகுத்தியதாலேயே க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக குழப்பநிலை ஏற்பட்டதாக இளைஞர் விவகார,திறன்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஏற்க முடியாத தீர்வொன்றை எவரும் எம் மீது திணிக்க முடியாது

### மாவை எம்.பி. சொல்வீச்சு



(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பு பொலிஸ்-காணி அதிகாரங்கள் அற்ற அரசியல் தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக எந்தவொரு தீர்வையும் ஏற்கமாட்டாது. ஏற்க முடியாத தீர்வொன்றை எவரும் எம்மீது திணிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மட்டக்களப்பு அமெரிக்க மிசன் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசு கட்சி மாநாடு-2012 ஏற்பாடு தொடர்பாக ஆராயும் பொருட்டு நடைபெற்ற இக் கூட்டத்திற்கு கட்சியின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய மாவை. சேனாதிராஜா,

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கும் எந்தவொரு தீர்வும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக வழங்கப்படக்கூடாது என்று ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்து அதன்படி செயற்படுகிறது.

படித்து பட்டம் பெற்றவரும் மக்களை குழப்ப முற்படுகிறார்கள். சிவில் சமூகம் என்ற போர்வையில் அண்மைக் காலத்தில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடனான பேச்சுவார்த்தையில் நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்துவதாக கூறியிருந்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான

(20ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தையை பணயம் வைத்து பல இலட்சம் கொள்ளை

### யாழில் நேற்றிரவு சம்பவம்

யாழ். நாவலர் வீதியில் யாழ். ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் நேற்றிரவு 8.15 மணியளவில் ஆறு பேர் கொண்ட கொள்ளையர் குழு கூரிய ஆயுதங்கள் சகிதம் கைக்குழந்தையை பணயம் வைத்து 3 இலட்சம் ரூபாய் பணமும் 10 பவுண் தங்க நகைகளையும் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.நாவலர் வீதி ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள வீட்டுக்குள் உள் நுழைந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வரும் புலம்பெயர் தமிழர்கள் முன்னாள் போராளிகளுடன் சந்திப்பு

### திவயின சந்தேகம்

கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் இருந்து உறவினர்களை பார்க்க வருவதாகக் கூறி, சுற்றுலா விசா அனுமதி பெற்று இலங்கைக்கு வரும் புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் தரப்பினர், யாழ்ப்பாணத்திற்கு சென்று, முன்னாள் போராளிகளை சந்தித்து இரகசியப் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் புலிகளின் சகல (19ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் முத்திரைகள் உத்தியோகபூர்வமானவை அல்ல!

### பிரான்ஸ் தூதரகம் அறிக்கை

பிரான்ஸில் வெளியிடப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்கள் மற்றும் படங்கள் ஆகியவற்றை கொண்ட முத்திரைகள் பிரான்ஸின் உத்தியோகபூர்வ முத்திரைகள் அல்ல என கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவராலயம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் அந்த அமைப்பின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட முத்திரை பிரான்ஸில் வெளியிடப்பட்டதாக வெளியான செய்திகள் தொடர்பாக, கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்கள் மற்றும் படங்கள் ஆகியவற்றை கொண்ட முத்திரைகள் பிரான்ஸின் உத்தியோகபூர்வ

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமா அரசு?

### ஐ.தே.கட்சி கேள்வி

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அழுத்தம் கொடுத்துள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் ஏற்கெனவே உறுதியளித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனால் அரசு தற்போது போகும் போக்கைப் பார்த்தால் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாது என உண்ணத் தோன்றுவதாக அவர் கூறியுள்ளார்.

அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட



பல விடயங்கள் பற்றி நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகவும், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பு எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## அகதிகள் படகு 2 ஆஸியில் மீட்பு

அவுஸ்திரேலியாவிற்கான இந்த வருடத்தின் முதலாவது அகதிகள் படகு நேற்று முன்தினம் சென்றுள்ளது. அவுஸ்திரேலியாவின் அஸ்மோர் தீவுக்கு அருகில் 35 பேருடன் வந்த படகு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து டிவி தீவுப் பகுதியில் 16 பேரைக்கொண்ட மற்றுமொரு படகும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்[illegible] வந்தவர்களும [illegible] சியாவால் விசா கட்டுப்பாடுகள்

(20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட மாகாண சபைத் தேர்தல் இனப்பிரச்சினைத் தீர்வின் முதற்படி

## மனோ கணேசன் யோசனை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அரசுக்கு உண்மையாகவே அக்கறை இருக்குமானால் முதலில் வடமாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்படும் வடமாகாண சபை நிர்வாகத்திடம் வடமாகாணத்தின் மீள்குடியேற்ற, மீள் கட்டுமான, அபிவிருத்திப்பணிகளை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிந்த பின் ஜனாதிபதி தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும், வடக்கில் உள்ளூராட்சி தேர்தலையும் இந்த அரசாங்கம் நடத்திமுடித்துள்ளது. அதேபோல்கிழக்குமாகாணம் மீட்கப்பட்டவுடனேயே விழுந்தடித்துக் கொண்டு சென்று கிழக்கு மாகாண சபை தேர்தலை நடத்தியது. இந்த தேர்தல்களை எல்லாம் நடத்த முடிந்த அரசாங்கத்திற்கு ஏன் வடமாகாண சபை தேர்தலை மாத்திரம் நடத்த முடிய வில்லை?

ஆளும் கட்சி அல்லாத வேறு கட்சிகளின் ஆளுமையின் கீழ் வடமாகாண சபை வந்து விடக் கூடாது என்பதற்காகவே அரசாங்கம் வட மாகாண சபை தேர்தலை தொடர்ந்து ஒத்தி வைக்கின்றது.தமது கட்சி வெற்றி பெறும் சூழல் வடமாகாணத்தில் உருவாகும் என எதிர்பார்த்து அதுவரைக்கும்அரசாங்கம் பல்வேறு சாக்கு போக்குளை சொல்லியபடி காலத்தை கடத்தி வருகிறது.

தமது கட்சியோ அல்லது கூட்டமைப்போ எது வெற்றி பெற்றாலும் கூட இது ஜனநாயகத்தின் வெற்றி என்பதை புரிந்துகொள்ளும் பண்பாடு இந்த அரசாங்கத்திற்கு கிடையாது.



நடைமுறை அரசியல் சட்டத்தின் படி, உடனடியாக வட மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் மூலமாக உருவாகும் புதிய வட மாகாண சபை நிர்வாகத்திடம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நடை பெறும் மீள் குடியேற்ற, மீள்கட்டமான, அபிவிருத்திப் பணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இது தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதற்படியாகும். அரசாங்கத்திற்கு ஒத்து ஊதுபவர்கள் தமது வாய்ச்சவாடல்களை நிறுத்தி விட்டு இதை முதலில்அரச தலைமைக்கு எடுத்துக் கூற வேண்டும்.

மாகாண சபை முறைமை தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு என நாம் சொல்ல வரவில்லை. அது தொடர்பில் அரசுடன் வடகிழக்கு மக்களின் தலைமை பேச்சு நடத்தி தீர்மானத்திற்கு வரட்டும். வடமாகாண சபை தேர்தலில்நமது கட்சி பங்குபற்றவும் போவதில்லை.

வடமாகாண மக்கள் தாம் விரும்பியவர்களுக்கு வாக்களித்து மாகாண நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைக்கட்டும். எமது நோக்கம் இன்று இராணுவ ஆட்சியின்கீழ் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து கொண்டிருக்கும் வடமாகாண உடன் பிறப்புகள் தமதுவாக்குகளால் தெரிவு செய்யப் படும்புதிய மாகாண ஆட்சியின் கீழ் ஓரளவுக்கேனும் நிம்மதியாக வாழும் சூழல்ஏற்படவேண்டும் என்பதாகும்.

இது நடைபெறுமானால் தேசிய இனப்பிரச்சினை தீர்வில் ஒரு படி எடுத்து வைக்கப்படலாம். அதன் மூலம்வடக்கில்மட்டும் அல்ல; தெற்கிலும் கொழும்பிலும், மலையகத்திலும் வாழும் தமிழ் மக்களும் இனவாத சூழல் நீங்கி நிம்மதியாக வாழும் சூழல் ஏற்படலாம்.

கொழும்பு உட்பட மேற்கு பிராந்தியத்தில்வாழும் தமிழ் மக்களின் தலைமைகட்சியென்ற முறையில் ஜனநாயக மக்கள் முன்னணியின் எதிர்பார்ப்பு இதுவாகும்எனமனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (பா)

## கிருஸ்ணாவின் விஜயம் குறித்து இந்தியா அதிகாரபூர்வமாக அறிவிப்பு

இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் புதிய நடவடிக்கைகளை ஏற்படுத்தும் பொருட்டு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை விஜயம் செய்ய இருப்பதாக இந்திய மத்திய அரசு தகவல் தொடர்புத்துறை தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இச்சுற்றுப் பயணத்தில் விவாதிக்கப்படும் என்று கிருஸ்ணா தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்தியா சார்பில் 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படவுள்ளது. அதற்கான திட்டங்கள் இதில் ஆய்வு செய்யப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரும் கிருஸ்ணா, ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்டோர்களை சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இந்திய முன்னாள் ஜனாதிபதியும் தலைசிறந்த விஞ்ஞானியுமான அப்துல் கலாம் இம்மாதம் நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## பாத பூஜை

சிறி அம்மா பகவானின் பாதை பூஜை நிகழ்வு இன்று புதன்கிழமை 2 மணிக்கு சுழிபுரம் சிறி அம்மா பகவானின் ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பக்தர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் கேட்கப்படுகின்றது. (பா-11)

## அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலயத்தில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட உள்ளது. இப்பதவிக்குத் தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1 இனைச் சேர்ந்த தீவகக்கல்வி வலய ஆசியர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப் படும்.

விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்ப முடிபு எதிர்வரும் 15ஆம் திகதி ஆகும் என தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (பா)

## திருமலையில் வர்த்தகர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(திருகோணமலை)

திருகோணமலை விகாரை வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உல்லாச விடுதியொன்றின் உரிமையாளர் 47 வயதுடைய மூதூர் மல்லிகைத் தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ராஜகோபால கடுமையான காயங்களுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஹோட்டலில் இருந்து விகாரை வீதி வழியாக அவர் தனது மற்றொரு நிறுவனமான எரிபொருள் நிலையம் ஒன்றை நோக்கி வாகனத்தில் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை தலைமையகப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா-11)


வட மத்திய மகளிர் கல்லூரியின் சாதனைப்பகிர்வும் நன்றியுடன் வாழ்த்துக்களும்

கணிதப்பிரிவு



செல்வி அனுதர்சா செல்வராசா 3A
(மாவட்ட நிலை – 9)

விஞ்ஞானப்பிரிவு



செல்வி மயூரி பத்மநாதன் 3A
(மாவட்ட நிலை – 21)

கணித, விஞ்ஞான பிரிவுகளிலிருந்து முதன் முறையாக க.பொ.த(உ/த) பரீட்சையில் தோற்றி பாடசாலைக்கு மாணவிகள் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலைப்பிரிவு



செல்வி யதுநந்தா முருகானந்தன் 3A
(மாவட்ட நிலை – 04)



செல்வி தீவ்யா மனோகரன் 3A
(மாவட்ட நிலை – 13)

வர்த்தகப்பிரிவு



செல்வி ஆராதனா சிவபாலன் A2B
(மாவட்ட நிலை – 08)

முதன்மை பெறுபேற்றிற்குரிய மேற்படி கல்லூரியின் சாதனையாளர்களையும், கல்லூரியின் பெறுபேற்றில் சிறந்த அடைவுகளை ஈட்டித்தந்த ஏனைய சாதனையாளர்களையும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். எமது கல்லூரி தன் வளர்ச்சித்தடங்களினூடே 1AB தர பாடசாலையாக தன்னிலையில் தரமுயர்ந்து, பன்முகப்புலமைகளையும் வெளிக்கொணர்வதற்கு ஏதுவான இயலளவு வழங்கிய சேவை நிலை, ஓய்வு நிலை கல்வி, நிர்வாக உயர் வளவாளர்கள் தமக்கும் கல்லூரிச் சாதனைகளுக்கு வளமும் வலுவும் வழங்கிய கல்வி சார் அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் உயர்தரப்பெறுபேற்றின் உயிர்ப்புக்கு இயன்ற ஒத்துழைப்பினை மனமுவந்து வழங்கிய வடமராட்சி வலய இதர 1AB தர பாடசாலைகளின் சமூகத்தினருக்கும், மேலாக எமது கல்லூரியின் உத்வேகமும், செயற்திறமுமிக்க அதிபர் திருமதி ஸ்ரீதரன் பாலராணி அவர்கட்கும் மற்றும் அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியப்பெருந்தகைகளுக்கும், எமது பிரதேச சமூக ஆர்வலர்கள், கல்லூரிசார் நலன்விரும்பிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் தமக்கும் நன்றியுடன் வாழ்த்துக்கள் பற்பல.

(சு-5425) பழைய மாணவர் சங்கம் - யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி



உ
ஹரி ஓம் நாராயணாயநம
அளவெட்டி - நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
சுவர்க்கவாயில் ஏகாதசி
விஞ்ஞாபனம்

| | | | |
|---|---|---|---|
| 05.01.2012 வியாழன் | காலை | 07.00 மணி | அபிஷேகம் |
| | முற்பகல் | 09.00 மணி | வசந்தமண்டபப் பூசை |
| | முற்பகல் | 10.00 மணி | எம்பெருமான் தேரில் எழுந்தருளி வீதி வலம் வருவார். |
| | மாலை | 06.00 மணி | சாயங்காலப் பூசை |
| 06.01.2012 வெள்ளி | நள்ளிரவு | 12.00 மணி | அர்த்தசாமப்பூசை |
| | அதிகாலை | 02.00 மணி | 1008 சங்காபிஷேகம் |
| | அதிகாலை | 04.00 மணி | வசந்தமண்டபப்பூசை |
| | அதிகாலை | 05.00 மணி | தீர்த்தோற்சவம் |

(7223)



DIPLOMA IN NURSING
(3 Years)
HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE
விண்ணப்ப இறுதித் தினம் : 31.01.2012
கற்கை நெறிக் கட்டணம் : 750/-
க.பொ.த. உயர் தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களைத் திருச்சிலுவை சுகநல நிலையம் 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குச் சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.
பணிப்பாளர்
(7089) தொ.பே.இல. : 021 300 1102 OR 222 2512

# இன்று ஒரு தகவல்

## முயற்சி தேவை

ஊருக்கு வெளியிலே அமைதியான ஒரு இடம். அங்கே ஒரு ஆசிரமம் இருந்தது. அதில் ஒரு சாமியார் தினமும் நல்ல போதனைகளைச் செய்வார். பலர் அங்கே சென்று சில நாட்கள் தங்கியிருந்து அவரின் அறிவுரைகளைக் கேட்டுவிட்டு, வருவது வழமையானதாக இருந்தது.

ஒரு தடவை அவரைத் தரிசிப்பதற்காக மூன்று வெளியூர் தம்பதிகள் வந்தார்கள்.

அந்த மடத்திலே சாப்பிட்டுவிட்டு தங்கியிருந்து அவருடைய போதனைகளைக் கேட்டுவிட்டுச் செல்வது அவர்களின் நோக்கமாக இருந்தது.

காலையிலே குளித்துவிட்டு பூஜையிலே அந்த சுவாமி அமர்ந்தார். இவர்களும் குளித்துவிட்டு அந்த பூஜையைப் பார்ப்பதற்காக அவர் முன்னால் வந்து உட்கார்ந்திருந்தார்கள்.

பூஜை ஆரம்பமானது. அது நீண்ட நேரம் நடந்து கொண்டே இருந்தது.

இவர்களுக்கு நல்ல பசி... இருந்தாலும் இந்த நேரத்திலே அதை எப்படி வெளியே காட்டிக் கொள்வது? அமைதியாக இருந்தார்கள். அந்த சுவாமி பூஜையை முடித்தார். அதன்பின் பேச ஆரம்பிதார். அவரது பேச்சு அருமையாகத்தான் இருந்தது. அமிர்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இவர்களுக்கு இருக்கிற வயிற்றுப்பசி அதை சரியாக கவனிக்க விடவில்லை. இருந்தாலும் இவர்களுக்கு மனதினுள் ஒரு எண்ணம்.

''உள்ளே சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கும் போல இருக்கிறது... இந்த உரை முடிந்ததும் எங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போவார்" என்று ஒரு நினைப்பு.

ஆனால், சுவாமி இதைப்பற்றி ஏதுவுமே பேசவில்லை! கண்டு கொள்ளவில்லை.

ஒரு அம்மா ''சாப்பாட்டைக் கவனிக்கலாமா?'' என்று மெதுவாக ஆரம்பித்தார்.

"ஓ... கவனிக்கலாமே!" என்று உள்ளே அழைத்துக்கொண்டு சுவாமி போனார். இவர்கள் மிகவும் அவசரமாக எழுந்து உள்ளே ஓடினார்கள். அங்கே ஒரு மேசை மேலே ஒரு கிண்ணம் மூடியிருந்தது.

ஓ... இதுதான் சாப்பாட்டு மேசை போல இருக்கிறது... இங்கே சாப்பாடு வந்துவிடும் என்று நினைத்தார்கள். உடனே போய் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். சுவாமி அந்தக் கிண்ணத்தை எடுத்து அந்த அம்மாவிடம் கொடுத்தார்கள். அவர்கள் உடனே அதை வாங்கி மூடியைத் திறந்து பார்த்தார்கள். உள்ளே ஒரு "சாவி" இருந்தது.

"ஓ... சரிதான்... இது சமையலறைச் சாவி போல இருக்கிறது. அங்கேபோய் அதைத் திறந்து... சாப்பாட்டை நாமே எடுத்துக்கொண்டு வந்து இங்கே வைத்து சாப்பிட வேண்டும் போல இருக்கிறது" என்று நினைத்தார்கள்.

சாவி இருக்கிறது. வாருங்கள் பூட்டிய அறையைக் காட்டுகிறேன் சுவாமி என்று அவர்களை அழைத்துக் கொண்டு போய் காட்டினார்.

இவர்கள் அந்த அறையை மிகவும் ஆவலோடு திறந்தார்கள். உள்ளே பார்த்தார்கள். அங்கே... அரிசி, பருப்பு, விதவிதமான காய்கறி எல்லாம் இருந்தது. சமையலுக்குத் தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் அடுப்பு என்பன இருந்தன.

சாப்பாடு தயாராக இருக்கும் என்றுநினைத்து போனவர்கள்; இதைப் பார்த்ததும் சோர்ந்து போய்விட்டார்கள்.

"சுவாமி... என்ன இது? சாப்பாடு இல்லையா?"

"அதுதான் சாப்பாட்டிற்கு தேவையான அனைத்தும் இங்கே இருக்கிறது. அடுப்பு மூட்டி... நீங்கள்தான் ருசியாகத் தகுந்த மாதிரி சமைக்க வேண்டும். இந்த சந்நியாசிக்கு எப்படி சமைக்கத் தெரியும்?'' என்று சுவாமி கேட்டார்.

"சாப்பாடு தயாராக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், நீங்கள் இப்படியாகச் சொல்வீர்கள்'' என்று நினைக்கவில்லை.

"நமது வாழ்க்கையிலே நல்ல பலன்களைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைத்தான் ஆண்டவன் கொடுப்பான்''

அதன்பின் அந்த மூன்று தம்பதிகளும் தெளிவடைந்து விட்டார்கள். நாங்கள் தெளிவடைவது எப்போது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட மக்களுக்கு பொருளுதவிகள்

(முல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பெய்த கடும் மழை காரணமாக 4 ஆயிரத்து 441 குடும்பங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களுக்குரிய உலர் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய உதவிகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாகவும் பொது அமைப்புக்கள் ஊடாகவும் வழங்கப்படுவதாக முல்லை.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உதவிப் பணிப்பாளர் றிட் நித்தியானந்தன் குலாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நவம்பர் மாதம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 7 கிராம அலுவலர் பிரிவுகளில் 441 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு முல்லைத் தீவு பிரதேச செயலர் பிரிவில் 25 குடும்பங்களும் ஆக மொத்தம் 466 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. டிசெம்பர் மாதத்தில் துணுக்காய், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 3 ஆயிரத்து 975 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு உலர் உணவுப் பொருட்களும், 500 துவாய், 500 படு க்கை விரிப்பு, 500 பாய் என்பவற்றுடன் யு.என். எச்.சி.ஆர். அமைப்பினால் 200 பாய், 500 தறப்பாள்களும் வழங்கப் பட்டுள்ளன. அத்தோடு ரி.டி.எச். என்ற நிறுவனத்தால் 250 நுளம்பு வலைகளும் ஐ.ஒ.எம். நிறுவனத்தினால் ஆயிரத்து 10 தறப்பாள்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 100 பேருக்கு தச்சு வேலைக்குரிய உபகரணங்களும் 100 பேரு க்கு மேசன் வேலைக்குரிய உப கரண ங்களும் மற்றும் 100 தொழிலாளர் களுக்கு சிறு தொழில் உபகரணாங் களும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# வவு. தேசிய கல்வியியல் கல்லூரிக்கு வணிக பாடத்திற்கு தெரிவானோர்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வணிக பாடநெறிக்கு தெரிவானவர்களின் விபரங்களை பீடாதிபதி பேர்னட் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்புக் கடிதங்கள்

* என்.மேரி சியானி – (ஊர்காவற்றுறை)
* எஸ்.சிறிநாத்– (கொக்குவில்)
* பி.தவராஜா– (வட்டுக்கோட்டை)
* ஜெ.ஜெகலேகா– (அத்தியடி)
* எஸ்.பிருந்தா– (கோண்டாவில் கிழக்கு)
* வி.பரிஷா– (கைதடி கிழக்கு)
* எஸ்.சன்ஷிகா– (பருத்தித்துறை) ஆகியோருக்கு ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 150 | 130 |
| உருளைக்கிழங்கு | 50 | 50-100 | 65 |
| பச்சைமிளகாய் | 150 | 240 | 150 |
| தக்காளி | 200 | 190 | 180 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 100 | 140 | 150 |
| பூசணி | 50 | 70 | 70 |
| புடோல் | 60 | 60 | 90 |
| வாழைக்காய் | 45 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 100 | 180 | 200 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | -- | 110 | 100 |
| கறிமிளகாய் | -- | 240 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 70-80 | 120 | 130 |
| கீரை – 1 பிடி | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 20 |

# இராசி பலன்

*04.01.2012*
*(மார்கழி 19,புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு*
*தசமி காலை 7.20 மணிவரை*
*பரணி முன்னிரவு 10.40 மணிவரை*
*இராகுகாலம் 12.31-2.01 மணிவரை*
*சுபநேரம் 5.01-6.31 மணிவரை*
*சித்தாமிர்தம்.*

**மேடம்** சிவாலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பத்தினர் உங்கள் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்,பிரியமான சிலருக்காக சில செலவுகள் செய்ய வேண்டி வரலாம், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்,தொலைதூரப் பயணம் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும் நாள்,போசன சுகமுண்டு.

**கடகம்** பம்பரமாக சுழன்று பணிபுரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், பயணத்தால் பணவரவு கிடைக்கும், தலைமைப் பொறுப்புக்கள் தேடி வரலாம்.

**சிங்கம்** சிக்கல் விலகி சிறப்படையும் நாள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பிரயாணங்களால் நன்மையுண்டு.

**கன்னி** சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம்.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், பொது நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவர்,உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு,எதிரிகள் விலகுவர்,ஆரோக்கியம் சீராகும்,பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** மாமன்,மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்,கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,புத்தி சாதுரியமாகச் செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் சேரும் நாள்,உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனையைச் சொல்ல முன்வருவர்,பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவர்.

**கும்பம்** தொழிலில் சிறுசிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், மூத்த சகோதரர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சுவாரஸ்யமான நாள்.

**மீனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் நாள், வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள், திருமணப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

வளவன்

# நாணயக்குற்றி தட்டுப்பாட்டை நீக்க வணக்கஸ்தலங்கள் முன்வரவேண்டும்

## மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தினால் நாணயக்குற்றிகளுக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வணக்கஸ்தலங்கள் முன்வர வேண்டும் என மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வணக்கஸ்தலங்களில் உள்ள உண்டியல்களில் பெருந்தொகையான குற்றி நாணயங்கள் நீண்ட காலத்திற்கு தேங்கியுள்ளது.

இக்குற்றிகளை புழக்கத்திற்கு கொண்டு வருவது தட்டுப்பாட்டினை நீக்குவதற்கான காத்திரமான நடவடிக்கையாகும்.

எனவே வணக்கஸ்தலங்களில் சேர்கின்ற நாணயக்குற்றிகளை ஒவ்வொரு மாதமும் வைப்பிலிடுவதன் மூலமோ அல்லது பல சரக்குக் கடைகளில் மாற்றிக் கொள்வதன் மூலமோ அவற்றை பொதுமக்களின் நாணயப் புழக்கத்திற்கு விட முடியும்.

ஆகவே வணக்கஸ்தல நிர்வாகிகளும் மற்றும் இது சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மத்திய வங்கியின் வட மாகாண முகாமையாளர் எஸ். கௌரிசங்கர் கேட்டுள்ளார். (அ)

# இவ்வாண்டுக்கான வாகன அனுமதி பத்திரங்களைப் பெற அறிவுறுத்தல்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேச பகுதிகளில் இவ்வாண்டுக்கான வாகனக்காப்புறுதி பத்திரம் மற்றும் இறைவரி பத்திரம் ஆகியவற்றை புதுப்பிக்காத வாகன சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கையில் வடமராட்சி பொலிஸ் தீவிரமாக ஈடுபடுவதனை காண முடிகின்றது.

வடமராட்சி ,நெல்லியடி , பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களில் பொலிஸார் வீதியோரங்களில் நின்று வாகனங்களை வழிமறித்து சோதனை இடுகின்றார்கள்.

இதனால் அதிகளவான வாகன சாரதிகள் இக்குற்றாச்சாட்டுக்கு ஆளாகின்றனர்.

சில சாரதிகள் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்படுவதுடன் சிலருக்கு தண்டப்பணம் விதிக்கப்படுகின்றது.

எனவே,குறித்த காலப்பகுதிக்குள் இவ்வாண்டுக்கானஅனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3-24)

## நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

மறவன்புலோ இளைஞர் கழக பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் தலைவராக மா.றஜீவன், செயலாளராக இ.சிவராஜினி, பொருளாளராக இ.சுபாசினி, அமைப்பாளராக மா.ராஜபதி, விளையாட்டுக்குழு செயலாளராக இ.இராஜகோகிலன், கலாசார உறுப்பினராக சி.தவராணி, தொழில் முயற்சி துவிந்தவி, ஊடகம் சி.ஜீவகுகன்,தேசிய சேவை நா. சுஜந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-3-29)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பள்ளம்புலம் முருகமூர்த்தி சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சென்ற நிதியாண்டு பொதுக்கூட்ட அறிக்கை செயற்பாட்டறிக்கை, கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படவுள்ளது என சனசமூக செயலாளர் செ.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார். (அ)

## திருவாசக முற்றோதல்

(நல்லூர்)

தும்பளை சக்தி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும் திருவாதிரை பூசையைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் நிகழ்வை சிவஸ்ரீ தியாகசோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.(அ-3-134)

# பேருந்து பயணிக்காததால் மக்கள் பெரும் அசௌகரியம்

(நல்லூர்)

சங்கானை, சாவகச்சேரி, வாதரவத்தை ஊடாக செல்லும் இலங்கை போக்குவரத்து சபையினரின் பேருந்துசேவை கடந்த பல மாதங்களாக சேவையில் ஈடுபடாமையால் அப்பகுதியில் உள்ள மக்கள் போக்கு வரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்ய வேண்டுமானால் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து புத்தூரிற்கு வந்தே பேருந்துகளில் பயணம் செய்கின்றனர்.

இப்பகுதியில் குடாநாட்டின் பல பகுதிகளில் தொழில் புரியும் திணைக்கள் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கையை எடுத்து பேருந்து சேவைகளை நடத்த முன்வந்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-134)




## மாணவர்களை புதிதாக இணைத்துக்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயின் முன்னணி பாலர் பாடசாலையின் 2012 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை இலவசமாக சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு எச்சாட்டி மற்றும் ஈச்சாட்டி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பாலர் பாடசாலைக்கு 3 வயது முதல் 5 வயது வரையுள்ள பாலர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளப்படவுள்ளனர் என நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)

# திருநெல்வேலி இந்து மயானம் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது

## மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து மயானம் நல்லூர் பிரதேச சபையினால் சரியாக பராமரிக்கப்படுவதில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கு காணப்படும் மடம் சரியாக பராமரிக்கப்படாமல்புற்கள், பற்றைகள் வளர்ந்து காணப்படுவதாகவும் இதனால் இறுதிக் கிரியைகளுக்குச் செல்லும் மக்கள் இருப்பதற்கு இடமின்றி பெரும் அவதிக்குள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு திருநெல்வேலி சந்தைக் கழிவுகளான மரக்கறி மற்றும் இறைச்சிக் கழிவுகள் என்பவை இங்கு கொட்டி விடப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இங்கு தகனம் செய்யும் உடல்கள் சரியாக தகனம் செய்யப்படுவதில்லை என்றும் நேற்று முன்தினம் திரு நெல்வேலியைச் சேர்ந்த இறந்த ஒருவரின் உடல் தகனத்திற்காக குறிப்பிட்ட மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை கிரியைக்காக சாம்பலை எடுக்க உறவினர்கள் சுடலைக்கு சென்றுள்ளனர்.

அங்கு உடல் முழுமையாக எரிக்கப்படாமல் நாய்களினால் சிதறடிக்கப்பட்டு உள்ளத னைத் தொடர்ந்து மீண்டும் நேற்றுக்காலை எரிக்கப்பட்டது என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபைக்கு அறிவித்ததனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சுடலைக்கு நேரில் சென்று பார்வையிட்ட உரிய தரப்பினர் அங்கு கடமையில் ஈடுபட்ட வரை பணிநீக்கம் செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)


## அங்குரார்ப்பண நிகழ்வு

(சாவகச்சேரி)

நாவற்குழி மேற்கு கிராம சேவகர் பிரிவில் வெண்ணிலா இள்ளஞர் கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில். கிராம சேவகர் ஆ.நடராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்மராட்சி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமல் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இதில் தலைவராக எஸ்.துஸ்யந்தி, செயலாளராக வி.அனித்தா, பொருளாளராக பி.தனுசியா, விளையாட்டுப் பொறுப்பாளராக ர.மில்றோய், கலாசார பொறுப்பாளராக ஜெ.தனுசியா, தொழில் முயற்சிப் பொறுப்பாளராக ச.பிரசாந்தினி,ஊடகமும் தகவலும் இ.விஜிதா, தேசிய சேவைப் பொறுப்பாளராக டே.அனுசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-29)



உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களான வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் சமாதான நீதவான் செ. சோமசுந்தரம், அதிபர் மா. மெய்யழகன் வல்லை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் வரவேற்கப்படுவதையும் மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் செ. சோமசுந்தரம் உரையாற்றுவதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மருதங்கேணிச் செய்தியாளர்)

# கடும் மழை காரணமாக புதிய அணைக்கட்டு பாரிய சேதம்

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் அபிவிருத்திப் பணிகள் ஜப்பான் நிறுவனத்தின் உதவியுடன் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.300 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் அணைக்கட்டு, வான்கட்டு என்பன அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில் அண்மையில் பெய்த கன மழை காரணமாக குளம் நிரம்பி வான்பாயத் தொடங்கியது.

இதனால் வருடத்தின் முதல் நாளே வான்கட்டுப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட அனைத்து அணைக் கட்டுக்களும் உடைக்கப்பட்டதோடு வேகமாக பாய்ந்த நீரினால் முறிகண்டி, முழுங்காவில் வீதியும் ஊடறுத்து பாய்ந்து வீதி போக்குவரத்தும் முற்றாக தடைப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இதனைதவிரவான்பகுதியில்பரவப்பட்டமண் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு வயல் நிலங்களுக்கு சென்றுள்ளமையால் பெருமளவு வயல் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(மாளிகாவத்தை)

மாளிகாவத்தை பகுதியில் நேற்று காலை இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரு பாதாளக் குழுக்களிடையே மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் காயமடைந்தவர்களுள் ஒருவர் பொலிஸார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாவத்தை பொலிஸார் மெற்கொண்டு வருகின்றனர்.

(அ-2)

# பரீட்சை முடிபுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

## மனிதஉரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் 16 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் சட்ட செயலாளர் நிமல் புஞ்சிஹேவா கூறுகின்றார்.

இதன் போது மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என செயலாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளின் போது முறையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா அல்லது இதற்கு வேறு காரணங்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் விசாரணைகளின் போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

பெறுபேறு தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்டால் அதனை ஆணைக்குழுவிடம் தெரிவிக்குமாறும் நிமல்புஞ்சிஹேவா தெரிவித்தார். (அ-2)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் காட்டுப்புலத்தைச் சேர்ந்த செல்வன் இன்பராணி (725214324V) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (அ)


KALAIMAGAL International College

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE — NOTHING IS IMPOSSIBLE

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.



(அ-5389)

இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை ( English Medium )
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.

**அனுமதிக்கு இன்றே முந்துங்கள்**

***மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:***

**எமது கல்லூரியின் கிளைகள்;**

தலைமைச் செயலகம்
- சேச் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
- நுணாவில் கிழக்கு, கண்டி வீதி, சாவகச்சேரி
- இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி
- தம்பசிட்டி றோட், பருத்தித்துறை
- ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி
- அம்மன் வீதி (புளியம் கூடல்), வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரம், வேலணை
- மாணிக்க பதி, சந்தை ஒழுங்கை, தண்ணீர் ஊற்று, முள்ளியவளை

**தைப்பொங்கல் திருநாள் முதல் கிளிநொச்சி மாநகரில் எமது கல்லூரியின் கிளை திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**

**KALAIMAGAL International College**

CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.

T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

# தேடப்பட்ட பொலிஸ் குற்றவாளி நாட்டைவிட்டு வெளியேற்றம்

## நீதிமன்றில் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடச் சென்ற போது உயிரிழந்த 30 வயது நபரின் மரணம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக கோட்டை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இவரின் வெளிநாட்டு பயணம் பற்றி குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாக பொலிஸார் நீதிமன்றில் கூறினர்.

இதேவேளை இந்த வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் இருந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.

பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தை சேர்ந்த அதிகாரியொருவர் மரணித்தவர் தண்ணீர் குடித்த போது மூச்சுத்திணறி இறந்ததாக கூறியிருந்தார். ஆனால் கொழும்பு வைத்திய அதிகாரியின் அறிக்கையில் மார்பில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதால் மூச்சுத்திணறி இறந்ததாக கூறப்பட்டுள்ளது.

பலவந்தம் பிரயோகிக்கப்பட்டதை வெளிப்படுத்தும் காயங்கள் உடலில் காணப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# சாவ. வணிக மன்றத்தினர் இன்று கடையடைப்பில் ஈடுபடவுள்ளனர்

## வணிக மன்றத் தலைவர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் இம்மன்றத்தின் எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் இன்று புதன்கிழமை கடையடைப்பில் ஈடுபடவுள்ளனர் என மன்றத்தின் தலைவர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வியாபரா நிலையங்களுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்துவதற்கு சாவகச்சேரி நகர சபையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளதனால் நுகர்வோர் வேறு கடைகளுக்குச் செல்கின்றனர். இதனால் வியாபாரிகளிடம் நுகர்வோர் வருவது தவிர்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக சுமுக முடிவு எட்டப்படும் வரை கடையடைப்பில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-29)


# தொழில்திறன் பயிற்சிகளை நிறைவுசெய்த மாணவர்கள் நிர்க்கதியான நிலையில் !

## சான்றிதழ், உபகரணங்கள், உதவிப்பணம் வழங்கக்கோரிக்கை

(பூநகரி)

உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் நேப் (NEHRP) திட்டத்தின் கீழ் தச்சு–மேசன் வேலைகளுக்கான தொழில்திறன் பயிற்சி நெறியானது நடத்தப்பட்டிருந்தது.

3 மாத காலத்தைக் கொண்ட இப்பயிற்சி நெறியில் இணையும் பயிலுநர்களுக்கு பயிற்சியின் முடிவில் சான்றிதழுடன் தொழில் உபகரணங்களும் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பயிலுநர்கள் பலர் ஆண், பெண், வயதானவர் என்ற வேறுபாடின்றி இப்பயிற்சி நெறியினை தொடர்ந்தனர்.



முழங்காவில், பளை, கோணாவில், ஜெயபுரம்போன்ற இடங்களில் வெளிக்களப் பயிற்சியினையும் மேற்கொண்டிருந்தனர்.

இருப்பினும் முன்னறிவித்தல் எதுவுமின்றி 3 மாத காலம் நிறைவடையும் முன்னரேயே பயிற்சி நெறி பூர்த்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பயிற்சி நெறியின் நிறைவில் வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட சான்றிதழ்களோ பயிற்சி உபகரணங்களோ மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படுவதாக் கூறப்பட்ட உதவிப் பணமோ இதுவரை கிடைக்கப்பெற வில்லை என பயிலுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமின்றி இது தொடர்பாக நேப்திட்டத்தினரை அணுகிய போதும் தமக்கு ஏமாற்றங்களே கிடைப்பதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட அப்பயிலுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-84)

# குழியில் விழுந்த இருவர் பரிதாபமாக உயிரிழப்பு

புதுவருட தினத்தில் வேலையை ஆரம்பிக்கும் பொருட்டு செங்கல் செய்யவென வெட்டப்பட்டிருந்த நீர்க்குழியில் விழுந்த இருவர் மிகவும் பரிதாபமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி இரவு ரிதிகம பொலிஸ் பிரிவிலுள்ள பிஹிம்புவ என்ற பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

ரிதிகம பிரதேசத்தைச்சேர்ந்த 29வயதுடைய சிவந்த ஹேரத், 31வயதுடைய அஜித்பண்டாரஎன்றஇருவரே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நம் சிந்தனையில் மாற்றம் வேண்டும்

## கூறுகிறார் கெஹலிய

(கொழும்பு)

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம்மிக்க நாடாக மாற்றுவதற்கு எமது தகவல் ஊடகத்துறை அமைச்சு ஊழியர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

புது வருடத்தில் புதிதாக பணிகளை ஆரம்பிக்கும் முகமாக தகவல் ஊடகத்துறை அமைச்சின் சுற்றாடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

இரண்டரை வருட காலத்துக்கு முன்னர் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இழந்தவர்களாக இலங்கை மக்கள் காணப்பட்டனர். வங்குரோத்து அடைந்த ஒரு நாடாக உலகம் இலங்கையை பார்த்தது.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நிலையை மாற்றியமைத்துள்ளார். நாட்டு மக்களின் ஆசீர்வாதமே அவருக்கு இந்த வெற்றியை வழங்கியது. அற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு கடுமையாக உழைக்க வேண்டும். முக்கியமாக தகவல் ஊடகத்துறை அமைச்சு ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

எமது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் உருவாக்கப்பட்ட இன ரீதியான பிரச்சினைகள் இன்னும் நூறு வீதம் தீரவில்லை. பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றால் எமது சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (அ-2)

# ஆளுங்கட்சிக்கு ஆதரவான கட்சிகள் ஆணைக்குழு அறிக்கையை எதிர்ப்பது தவறு

## லக்பிம நாளேடு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சிக்குள் நிலவிவரும் முரண்பாடுகள் ஆரோக்கியமானதல்ல என லக்பிம பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆளும் கட்சியின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும்கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த அறிக்கைக்கு பூரண ஆதரவளித்து வரும் அதேவேளை தேசியவாத கட்சிகளாக அடையாளப்படுத்திக் கொள்ளும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் அறிக்கையை எதிர்க்கின்றன.

தாருஸ்மன் அறிக்கை, சனல் 4 காணொளி என பல்வேறு வழிகளில் சர்வதேச சமூகம் அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

குறிப்பாக புலம்பெயர் தமிழ் மக்களின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிராக சில சர்வதேச சக்திகள் மோசமான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடுவது ஆபத்தானது என அப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை மாநாட்டின்அமர்வுகளில் இலங்கை விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளதாகவும் இதன்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் பதிலளிப்பதற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் லக்பிம பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# பொலிஸாரின் குற்றச் செயல்களை ஆய்வு செய்வதற்கு விசேட பிரிவு

பொலிசாரின் குற்றச்செயல்களை ஆய்வு செய்யும் விசேட பிரிவொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றச்செயல்கள் தொடர்பில் ஆய்வு செய்து பரிந்துரைகளை முன்வைப்பதே இந்தப் பிரிவின் பிரதான இலக்கு என குறிப்பிடப்படுகிறது.

குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட்டு மீண்டும் குற்றச் செயல்கள் இடம் பெறுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் நேரடி கண்காணிப்பில் இந்தப்பிரிவு இயங்கும் என குறிப்பிடப்படுகிறது. (அ-2)



யாழ்.மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் பரிசில் நாளும் நிறுவுனர் தினமும் நடைபெற்றபோது யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி செல்வி ம.சரவணமுத்து,வேல்ட் விஷன் நிறுவன முகாமையாளர் ஹொசான் உள்ளிட்ட விருந்தினர்களை பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# பாதுகாப்பு கண்காணிப்பிற்கு நவீனமயமான கமராக்கள்

(கொழும்பு) —

நபர்கள் மற்றும் வாகன இலக்க தகடுகள் என்பனவற்றை இனம் காணும் வகையில் பாதுகாப்பு கண்காணிப்பு கமராக்கள் நவீனமயப் படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் வாகன போக்குவரத்து வழக்குகள் தொடர்பாக அறிவிக்கப்படும் தண்டப்பண பிரசுரங்களுக்கு பதிலாக நிதி குறுந்தகவல்கள் மூலம் அபராதம் செலுத்தும் முறைமை ஒன்றும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் சேவையின் சகல அதிகாரிகளுக்கும் அரச சேவை ஆணைக்குழுவிற்கு அமைய பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள்வழங்கப்படும்எனவும்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சகல பிரஜைகளினதும் இரகசிய புள்ளிவிபர வலையமைப்பு உருவாக்கம்

(கொழும்பு) —

இலங்கையின் சகல பிரஜைகளினதும் இரகசிய தகவல்களும் உள்ளடங்கிய கணனி புள்ளிவிபர வலையமைப்பு ஒன்றை உருவாக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு முழுமைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டில் ஆயிரத்து 250 மில்லியன் ரூபா நிதி வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2013 , 2014 ஆம் ஆண்டுகளுக்காக 13 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் சகலருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதுடன் இந்த அடையாள அட்டை வெளியிடப்பட்ட பின்னர் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் அடையாள அட்டைகள் பாவனையில் இருந்து நீக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# பங்காளிக் கட்சிகளுடன் பேச ஜனாதிபதி மஹிந்த திட்டம்

(கொழும்பு) —

நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரத்தில் ஆளும் கட்சியின் அங்கத்துவக் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாக ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி உட்பட கட்சிகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கடந்த வாரத்தில் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டிருந்ததையடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் சபை அமர்வுக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஆளும் கட்சியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் விருப்பம் கொண்டுள்ளதாக அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேசத்தின் அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன்னால் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கம்யூனிச கட்சியின் சார்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டியூ குணசேகர வலியுறுத்தியுள்ளார். (எ-5)

# சிறிகொத்தா தாக்குதல்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெறப்படும்

(கொழும்பு) —

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடத்தப்பட்ட தாக்குத்கள் தெடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறுக் கொள்ளப்படவுள்ளதாக மிரிஹானா பொலிஸார் நேற்றைய தினம் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் கங்கொடவில் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

சிறிகொத்தா தாக்குதல் தொடர்பில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள மேல் மாகாண சபை உறுப்பினர் சிராந்த அமரசேகர சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

பின்னர் அவர் நீதிமன்றத்தினால் 10 ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன உள்ளிட்ட உறுப்பினர்கள் சிலர் நேற்றைய தினம் நிதிமன்றத்தில் முன்னிலையானார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவம் உள்ளிட்ட பதவிகளுக்கான வாக்கெடுப்புக்கள் இடம் பெற்றதன் பின்னர் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதுடன் சிறிகொத்தாவில் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டுக்களே இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இதே வேளை, இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-2)

# 2012.01 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ கி.மு.46- டைட்டஸ் லபீனஸ் ருஸ்பீனா என்ற நகரில் இடம்பெற்ற சமரில் ஜூலியஸ் சீசரைத் தோற்கடித்தான்.

★ 1493-கொலம்பஸ் தான் கண்டுபிடித்த புதிய உலகை விட்டுப் புறப்பட்டார்.

★ 1642-இங்கிலாந்து மன்னன் முதலாம் சார்ல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்ய தனது படைவீரர்களை அனுப்பினான்.

★ 1698-லண்டனில் அரச மாளிகையான வைட்றோஸ் தீயினால் சேதமுற்றது.

★ 1717-நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியன கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டன.

★ 1762-ஸ்பெயின் மற்றும் நேப்பில்ஸ் மீது இங்கிலாந்து போரை அறிவித்தது.

★ 1847-சாமுவேல் கோல்ட் தனது முதலாவது சுழல் துப்பாக்கியை அமெரிக்க அரசுக்கு விலைக்கு விற்றார்.

★ 1854-கப்டன் வில்லியம் மக்டொனால்ட் என்பவர் மக்டொனால்ட் தீவுகளைக் கண்டுபிடித்தார்.

★ 1878-சோஃபியா நகரம் ஒட்டோமான் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றது.

★ 1884-ஃபாபியன் அமைப்பு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1889-இலங்கையில் சப்ரகமுவ மாகாணம் என்ற புதிய மாகாணம் சேர் ஈ.என்.வோக்கர் என்பவரால் உருவாக்கப்பட்டது.

★ 1896-யூட்டா 45 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.

★ 1912-பிரித்தானியக் காலனித்துவ நாடுகளில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1948-பர்மா ஐக்கிய இராச்சியத்திலிருந்து சுதந்திரம் பெற்றது.

★ 1951-சீன மற்றும் வடகொரியப் படைகள் சியோல் நகரைக் கைப்பற்றின.

★ 1958-14 வயது பொபி ஃபிஷர் ஐக்கிய அமெரிக்காவின் சதுரங்க சம்பியன் போட்டியில் வெற்றி பெற்றார்.

★ 1958-முதலாவது செயற்கைக்கோள் ஸ்புட்னிக் 1 தனது சுழற்சிப் பாதையை விட்டு விலகி பூமியில் வீழ்ந்தது.

★ 1959-லூனா 1 சந்திரனுக்கு மிக அண்மையில் சென்ற விண்கலம் ஆனது.

★ 1990-பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் பயணிகள் தொடரூந்து ஒன்று சரக்கு தொடரூந்துடன் மோதியதில் 300 பேர் உயிரிழந்தனர்.

★ 1998-அல்ஜீரியாவில் மூன்று வெவ்வேறு நிகழ்வுகளில் 170 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2004-ஸ்பிரிட் என்ற நாசாவின் தரையுளவி செவ்வாயில் தரையிறங்கியது.

### பிறப்புக்கள்

★ 1809-லூயி பிறெயில் (இ.1852)

★ 1940-பிறையன் டேவிட் ஜோசெப்சன், நோபல் பரிசு பெற்றவர்

★ 1940-காவோ சிங்ஜியான், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்

★ 1945-ரிச்சார்ட் ஷ்றொக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1984-ஜீவா, தமிழ்த் திரைப்பட நடிகர்

★ 1985-ஏல் ஜெஃப்பர்சன், அமெரிக்க கூடைப்பந்து வீரர்

### இறப்புக்கள்

★ 1960-அல்பேர்ட் காம்யு, நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1913)

★ 1961-எர்வின் சுரோடிங்கர், ஆஸ்திரிய- ஐரிய பௌதிகவியலாளர் (பி.1887)

★ 1965-டி எஸ். எலியட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1888)

### சிறப்பு நாள்


★ பர்மா-சுதந்திர தினம் (1948)



★ 1643-புவியீர்ப்பு விதி உட்பட பல கண்டுபிடிப்புக்களுக்கு சொந்தக்காரரான சேர் ஐசக் நியூட்டனின் பிறந்த தினம் (இ.1727)

# 2012 புத்தாண்டு பலன்கள் உங்களுக்கு எப்படி?

08



விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

## விருச்சிகம்

### சேமிப்பு வளரும்! செல்வாக்கு உயரும்!

விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் விருச்சிக இராசி நேயர்களே!

விடாமுயற்சி தான் உங்கள் வெற்றியின் இரகசியம். உடல் வலிமையைக் காட்டிலும், உங்கள் உள்ளத்திற்கு வலிமை அதிகம்.

உங்களுக்கு இந்த புத்தாண்டு பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்குமா? மன்னாதி மன்னர்களைப் போல வாழ வழிகாட்டுமா? எந்நாளும் இன்பங்களை வாரி வழங்குமா? என்பதைப் பற்றி பார்ப்போம்.

வருடத் தொடக்கமே உங்களுக்கு வசந்தமாக அமையும். ஜென்ம இராகு செல்வாக்கை உயர்த்தும். சேமிப்பை அதிகரிக்கச் செய்யும். ஏழரைச்சனி தொடங்கினாலும், உங்கள் இராசியைப் பொறுத்தவரையில் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியாக சனி விளங்குவதால், அனைத்திலும் வெற்றியை அள்ளிக் கொடுப்பவர் சனி பகவான் தான். எனவே, விடாது விநாயகர் வழிபாட்டையும், வேலவன், வள்ளி தெய்வானை வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும், சனி பகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

### 01.01.2012 முதல் 16.05.2012 வரை

இக்காலம் உங்களுக்கு இனிய காலம் தான். வருடத் தொடக்கத்திலேயே இராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, தொழில்வளம் மேலேங்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். வீடுகட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். சுக்கிர பலத்தால் சகோதர ஒற்றுமை பலப்படும்.

மீனத்தில் புதன் சஞ்சரிக்கும் போது விபரீத இராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வதரிசனங்களுக்காக பயணங்களை மேற்கொள்வீர்கள்.

குருவின் பார்வைபலம் உங்கள் இராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் தொல்லை ஏற்படாமல் இருக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். பார்க்கும் குருவைப் பலப்படுத்த தெட்சணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

### 17.05.2012 முதல் 31.12.2012 வரை

இக்காலம் உங்களுக்கொரு பொற்காலம் ஆகும். தன பஞ்ச மாதிபதி குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. அதிலும் சப்தம பார்வை சகல யோகங்களையும் வழங்கும். எனவே, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்துவீர்கள். சேமிப்பு உயரும் இந்த நேரத்தில் விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் வாங்கி மகிழ்வீர்கள்.

குருவின் பார்வை ஜென்ம இராசியில் பதிவதோடு, 3 மற்றும் 11 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது. எனவே, உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு ஒப்பற்ற விதத்தில் கிடைக்கும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். அரசு வழி ஒத்துழைப்போடு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இளைய சகோதரத்தின் உறவு பலப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் அகன்று புதிய திருப்பம் ஏற்படும்.

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சனி, செவ்வாய் சேர்க்கை இலாப ஸ்தானத்தில் ஏற்படுகிறது. இருப்பினும், குருவின் பார்வை அதில் பதிவதால் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள்.

சகோதரர்களை அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது. அரசியல் ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரலாம். கூட்டாளிகளையும், பணியாளர்களையும் கொஞ்சம்கூட யோசிக்காமல் மாற்றி அமைப்பீர்கள். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருப்பதால் அனைத்துக் காரியங்களிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

வருடக் கடைசியில் இராகு-கேது பெயர்ச்சி நடைபெற இருக்கிறது. டிசெம்பர் 2ஆம் திகதிக்கு மேல் கேது 6லும், இராகு 12லும் சஞ்சரிக்கப் போகிறார்கள். மறைவிடங்களில் இராகு, கேதுக்கள் சஞ்சரிப்பதன் மூலம் நிறைவான பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். இறை வழிபாட்டில் சர்ப்ப சாந்தியையும் நீங்கள் சேர்த்துக் கொண்டால் குறைகள் அகலும். குடும்ப முன்னேற்றமும் கூடும்.

### சாதனை நிகழ்த்த சமயோசித புத்தி தேவைப்படும் காலம்!

சில கிரகங்கள் வக்ர காலத்தில் நன்மையைக் கொடுக்கும். சில கிரகங்கள் வழிபாட்டால் தான் வக்ர காலத்தில் நன்மை தரும். மனிதர்களின் உடல் பலமிழந்த காலத்தில்மருத்துவ மனைக்குச்செல்வதுபோல, கிரகங்கள் பலமிழந்த காலத்தில் நாம் கோவிலுக்குச் செல்லவேண்டும்.

♦ செவ்வாயின் வக்ர காலத்தில் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

♦ புதனின் வக்ர காலத்தில் பொருளாதார நிலை உயரும்.

♦ சுக்கிரனின் வக்ர காலத்தில் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

♦ குருவின் வக்ர காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்களையும், குழந்தைகளையும் அனுசரித்து செல்வது நல்லது.

♦ சனியின் வக்ர காலத்தில் நிலம் விற்பனையும், தன இலாபங்களும் ஏற்படும். உடன் பிறப்புகளை அனுசரித்துச் செல்லவேண்டியது அவசியமாகும்.

### புத்தாண்டில் வளம் பெற மூத்தான வழிபாடு!

உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் முருகப் பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. முருகன் சந்நிதியில்,

செல்வம் குவிந்திட,
செல்வாக்கு உயர்ந்திட,
வள்ளி மணாளா!
வரம் தந்து காப்பாய்!

என்று சொல்லுங்கள். வள்ளி மணாளன் எல்லா நாட்களையும் உங்களுக்கு இனிய நாட்களாக அமைத்துக் கொடுப்பான்.

(தொடரும்)

"ஜோதிடக் கலைமாமணி"
சிவல்புரி சிங்காரம்

# கருணைக்கு பேதமில்லை



ஆன்மீகம் 12

நமக்கு வந்திருக்கின்ற பாதிப்பைப் பயன்படுத்தி, ஒரு நல்ல மலராக நாம் மலர வேண்டும். யோகத்தில், எப்போதுமே தாமரைப் பூவை ஒரு அடையாளமாகப் பயன்படுத்துகிறோம். ஏனெனில், சேறு எங்கே அதிகமாக இருக்கிறதோ, அங்கே தான் தாமரைப்பூ நன்றாக வளருகிறது. பார்க்க சேறு அசிங்கமாக இருக்கிறது; மலர், அழகாக வாசனையாக இருக்கிறது. ஆனால், இந்த சேறு தான் ஒரு பூவாக மாறிவிட்டது. நாம், சேற்றைப் பார்த்து அதைப் பிடிக்காமல் ஓடிப்போய்விடாலாம். அல்லது, எல்லா இடங்களிலும் சேறுதானே இருக்கிறது என்று நாமும் சேறாக மாறிக்கொள்ளலாம் அல்லது அந்த சேற்றையே உபயோகப்படுத்தி, நாம் ஒரு · அழகான மலராகவும் மலர முடியும். இந்த வாய்ப்பு, ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் எந்த விதமான சூழலில் இருந்தாலும் அவனுக்கு இருக்கிறது. இந்த வாய்ப்பை உபயோகப்படுத்துவதற்க்குத் தேவையான உதவி மற்றும் கருவியை யோகத்தின் மூலமாக நிச்சயமாக உருவாக்கிக் கொடுக்க முடியும்.

கேள்வி: எச்.ஐ.வி.யால் பாதிக்பட்ட நான் இரவில் தூங்கவே முடியவில்லை. ஏனெனில், எனக்கு எச்.ஐ.வி இருப்பதால், மரணம் வந்துவிடுமோ என்ற பயம் வருகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

சத்குரு: ஒவ்வொரு மனிதனுக்கும், உயிர்ப் பாதுகாப்பு என்பது மிகவும் ஆழமான உணர்வு. எச்.ஐ.விஅல்லது எய்ட்ஸ் ஆல் மட்டுமே நமக்கு இந்தப் பயமிருக்கிறது என்பதல்ல. அனைவருக்குமே இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இந்த எச்.ஐ.வி (எய்ட்ஸ்) ஆல் நமக்கு மரண பயம் வந்துவிட்டது. மற்றவர்களெல்லாம் தற்போது அதை மறந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும், ஏதோ தாங்கள் 10ஆயிரம் வருடங்கள் வாழப்போவதாக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு சாத்தியமில்லை. அனைவருக்குமே மரணம் காத்துக் கொண்டு இருக்கிறது. வீதியிலே கால்வைத்தால், வீட்டிற்குத்திரும்புவார்களா, இல்லையா என்று யாருக்கும் தெரியாது. இப்போது, நோய் வந்ததால் நம்முடைய மனதில் மரணபயமே ஓடிக்கொண்டிருக்கிறது. நம் உடலுக்கும், மனதிற்கும் ஆழமான தொடர்பு இருக்கிறது. ஒரு கயிற்றை உங்கள் மேல் வீசி பாம்பென்று சொன்னால், நீங்கள் கயிற்றை பாம்பென்று நினைத்துக் கொள்கிறீர்கள். பாம்பு உங்கள் மேல் விழவில்லை என்றாலும், நீங்கள் பாம்பென்று நினைத்துக் கொண்டீர்கள். பாம்பென்று ஒரு கணம் நினைத்தாலே நம் உடலெல்லாம் நடுங்குகிறது. இதயம் அடித்துக் கொள்கிறது, நமக்கு இரத்த அழுத்தம் வந்து விடுகிறது, ஏதேதோ நடக்கிறது. நம்மேல் பாம்பு விழவுமில்லை, கடிக்கவுமில்லை. எதற்காக, கயிறு விழுந்ததற்கே இப்படி ஆகிவிட்டதென்றால், நாம் நம் மனதில் வேறு ஏதோ நினைத்து விட்டோம். எனவே, மனதில் எது நடந்தாலும், உடலிலும் அது தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. மனதில் நடக்கும் எண்ண அலைகளுக்கேற்ப உடலில் ஒரு இரசாயன மாற்றம் எப்போதுமே நடந்திருக்கிறது. எனவே, நம் மனதில் இத்தகைய எண்ண அலைகளை உருவாக்கினால், நமக்கு நோயெல்லாம் வரத்தேவையில்லை, நோய் வாராமலேயே உயிர் போய்விடும். நமக்கு (எச்.ஐ.வி) எய்ட்ஸ் வர வேண்டும் என்ற அவசியமில்லை. நாம் மரணபயத்துடன் இருந்தாலே உயிர் போய்விடும். வெளியிலிருந்து, நமக்கு நோய் வேண்டிய தேவையில்லை. மனதிற்கும் உடம்பிற்கும் இத்தகைய தொடர்பு எப்போதும் இருக்கிறது. அப்படியென்றால் நம்முடைய மனதை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்?

உடலில் வருகிற பாதிப்பு வெளியிலிருந்து வந்த ஒன்று. ஆனால், மனதில் வருகிற பாதிப்பு உருவாக்கிற ஒன்று. ஏற்கனவே, நமக்கு உடலில் ஒரு பாதிப்பு இருக்கிறது. மனதிலும் பாதிப்பை உருவாக்க வேண்டுமா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். வெளியிலிருந்து வந்த பாதிப்பிலிருந்து நம்மால் தப்பித்துக் கொள்ள இயலவில்லை. ஆனால், நாமே உருவாக்குகின்ற பாதிப்பை நம்மால் தவிர்த்துவிட முடியும். இந்த நோய் ஏதோ ஒரு கிருமியாலோ அல்லது வேறு எதனாலோ நமக்கு வந்துவிட்டது. அதுநாம் சொல்வதைக் கேட்காது. உடலில் புகுந்த அந்த நோய் அதன்போக்கில் நமக்குள் ஏதோ பாதிப்பை உருவாக்கத்தான் செய்யும். ஆனால், நம்மனம் நாம் சொல்வதைக் கேட்கவேண்டும். அல்லவா? நம்முடைய மனம் நாம் சொல்வதைக் கேட்கவில்லை யென்றால் நமக்கு வேறு எதிரி தேவையில்லை. எச்.ஐ.வி என்றெல்லாம் எதுவும் தேவையில்லை. எப்போது உங்கள் மனம் நீங்கள் சொல்வதைக் கேட்கவில்லையோ அப்போது அழிவுதான். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

---

03

# மலேசியா தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களும் இதழ்களும்

**ஜனாப்.மு.அப்துல் லத்தீப்....**

இந்நாட்டில் முதன் முதலில் வெளிவந்த மாணவர் திங்கள் இதழ், மாணவர் பூங்கா இதனை 1956 ஆம் ஆண்டு தொடங்கி நடத்தினார். சிறந்த சிறுகதைகளையும் சர்ச்சைக்கும் சிந்தனைக்கும் உரிய கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

இவர் மனித தெய்வம், கதைக் கொத்து, சிறுகதைக் களஞ்சியம், ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களையும் பூவுலகில் புகழடைந்தோர், மணிச்சரம், எண்ணரதங்கள், சில நிமிடங்களில் சில சிந்தனைகள் முதலான கட்டுரை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். 1963 ஆம் ஆண்டிலிருந்து மலைநாடு, தேசதூதன், தினமணி ஆகிய நாளேடுகளில் பிரதம ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார். மலேசிய வானொலியில் அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றி இருக்கிறார். மலேசிய தொலைக் காட்சியிலும் செய்தி வாசித்திருக்கிறார். இவரது சேவையைப் பாராட்டி மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தங்கப்பதக்கமும் பணமுடிப்பும் நற்சான்றிதழும் வழங்கி கௌரவித்துள்ளது. மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்பாளர் சங்கத்தின் டத்தோ பத்மநாபன் இலக்கிய விருதும் இவருக்குக் கிடைத்துள்ளது. இவருக்கு 1967 இல் திருமணம் நடந்தது. ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றனர்.

**ஜனாப். கா. ஆப்துல் காதர்**

இவரது முதல் சிறுகீதை 1964 ஆம் ஆண்டு தமிழ் மலர் நாளிதழில் வெள்ளிவந்ததைத் தொடர்ந்து இது வரை எண்பது சிறுகதைகள், முப்பது உரை வீச்சுக்கள், நூற்று இருபது வானொலி நாடகங்கள் எழுதியுள்ளார். இவருடைய படைப்புக்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை, அன்றில் பறவை (சிறுகதை), கங்கை (வானொலி நாடகம்), பேரரசு (இஸ்லாமிய வானொலி நாடகம்) ஆகியன. இவர் பெண்விடுதலை வேண்டும் எனும் தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய நாடகங்கள் இலங்கை வானொலியிலும் ஒலியேறியிருக்கின்றன. இலங்கை வாரப் பத்தரிகையான சித்திரன் இதழில் இவருடைய படைப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவரது இலக்கியச்சேவைக்காக நெகிரி ஆளுநர் இவருக்கு PMC விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

**ஜனாப் டாக்டர் எஸ். எம்.ஜைனுத்தீன்**
(B.Sc.B.Ed.D.Litt)

இலக்கிய உலகில் பட்டர் வொர்த் ஜைனுத்தீன் எனும் புனைபெயரில் அறிமுகமும் பிரபலமும் ஆகியிருக்கும் இவர் 1955 ஆம் ஆண்டு எழுதத் தொடங்கினார். இவரது முதல் கவிதை தமிழ் முரசு நாளேட்டில் 1956 ஆம் ஆண்டு இடம் பெற்றது. கல்விச் சேவை அதிகாரியாகப் பணியாற்றும் இவர்பல கட்டுரைகளும்அதிகமான கவிதைகளும் எழுதியுள்ளார்.

**பரிசும் பாராட்டும்**

அ. சிலாங்கூர் தமிழ் எழுத்தாளர் சங்கம் தங்கப்பதக்கம் அணிவித்துச் சிறப்பித்தது.

ஆ. மலேசியத்தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கியது.

இ. இலங்கை இளம்பிறை இயக்கம் பாவலர்திலகம் விருது வழங்கிக் கௌரவித்துது.

ஈ. அமெரிக்க உலகப் பல்கலைக் கழகம் இவரது இலக்கிய சேவையை அங்கீகரித்து கௌரவ டாக்டர் பட்டம் அளித்தது.

தமிழ் முரசு நாளேட்டில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய பாவலர் திலகம் அவர்கள் நறுமணம் என்ற மாத இதழை 1959ஆம் ஆண்டு நடத்தியுள்ளார்.

**வெளியிட்டுள்ள நூல்கள்**

மாமறை வந்தமாதம் (1964) செந்தமிழ்த்தேனி, கவிஞர் (1974) பலராமையா சுற்றுலா (1966) முதலான கட்டுரை நூல்களையும் இதயத்தாமரை (1961) எனும் கவிதை நூலையும் வெளியிட்டுள்ளார். எல்லா தமிழ் எழுத்தாளர் இயக்கங்களின் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டுள்ள இவர் கவிதை மாலை இயக்கத்திற்குத் தலைமை ஏற்று வழிநடத்திச் செல்கிறார்.

**ஜனாப். மைதீன் ஹசன் கனி**

மலேசிய நாட்டில் மலேசிய வானொலியில் பொது நிகழ்ச்சிகளில் கலை மேடைகளில் நிலைத்து புகழ்பரப் பிக்கொண்டிருக்கும் இவர் பினாங்கு மாநிலத்தில் 15.03.1938 இல் பிறந்தார். தமிழ் ஏழாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று ஓர் இரவுப் பள்ளியில் ஆங்கிலம் பயின்றார். பின்னர். அலுவலகப் பையனாக, தேநீர் அங்காடியின் உரிமையாளராக, ஒட்டுக்கடை வியாபாரியாக இளமைக்கால வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர். வானொலியில் நடிகராக நுழைந்த இவர், சிறந்த நடிகர் என்ற பெயரோடு 1961 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டுவரை வானொலி நிலையத்தில் நிரந்தரத் தயாரிப்பாளராகப் பணிபுரிந்தார். இவர் திருமணமானவர். ஏழு குழந்தைகளுக்குத் தந்தை.

**பணி**

மலேசிய வானொலியில் செய்தி வாசிப்பது, சமூக, இலக்கிய நாடகங்கள் தயாரிப்பது, இலக்கியத் தொகுப்புக்களை வழங்குவது, பேட்டிகாணுதல், வர்ணனை செய்தல், நடிப்பது போன்ற அனைத்துப்பணிகளையும் செய்து வந்த இவருக்குப்பெரும் புகழைத் தேடித்தந்தது. மக்கள் நடுவே என்னும் இவரது தயாரிப்பு தமிழ்ச் சமூகத்தின் சிக்கல்களை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டதால், அது பெரும்பயனாகவும் இருந்திருக்கிறது.

(தொடரும்)

**கே.ஏ.ஜெஹபர் உசேன்**
**-தமிழ்நாடு**

# அரசியலில் இளையோரின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது

## சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசியலில் இளையோரின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேதமதாச தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய சட்ட மூலத்தில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை ஒடுக்கும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு 40 சதவீத ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

எனினும் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்டத்தில் மகளிர் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக வரையறுக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மகளிருக்கு 12.5 வீதமும் இளைஞர் யுவதிகளுக்கு 12.5 வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இளம் சமூகத்தின் பங்களிப்பு அதிகமாக தேவைப்படும் காலகட்டத்தில் அரசாங்கம் இவ்வாறான ஓர் நடவடிக்கை எடுத்துள்ளமை பெரும் அதிருப்தி அளிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

18 தொடக்கம் 35 வயது வரையிலான இளைஞர் யுவதிகளுக்கும் மகளிருக்கும் தலா 25 வீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் பாராளுமன்றில் குரல் கொடுக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## விசாரணைகளை ஆரம்பிக்க உத்தரவு

(பொலநறுவை)

பொலநறுவை பொது வைத்தியசாலையின் அறை ஒன்றில் பொதுமக்க ளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் விருந்துபசாரம் ஒன்றை சிலர் நடத்தியமை தொடர்பில் உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி இரவு புதுவருட பிறப்பின் நிமித்தம் பொலநறுவை பொது வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினாரால் விருந்துபசாரம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் உள்ள மக்கள் மற்றும் நோயாளிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கூச்சல் மற்றும் அதிக ஒலியுடன் பாடல்கள் ஒலிபரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் விசாரணைக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது

இலங்கைக்கு கொண்டு வருவதற்கு திட்டமிட்டிருந்த ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருள் இந்திய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் 50 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் தூத்துக்கடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை வில்பத்து தேசிய சரணாலயத்தில் மிளகாய் செடிகளுக்குள் வளர்க்கப்பட்ட ஒரு ஏக்கர் கஞ்சா செய்கையினை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன.

இதனுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)

## ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு ,புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களுக்கு நிதியொதுக்கீடு

ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகங்களில் குளங்கள், சிறுவீதிகள், குடிநீர்த்திட்டங்கள், பொதுக்கட்டடங்கள் பொதுவசதிகளுக்காக 77 கோடியே 68 இலட்சத்து 38 ஆயிரத்து 825 ரூபாவும் என்றிப் திட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக என்றிப் திட்ட உதவிப் பொறியியலாளர் எஸ்.திரகலாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சிறு குளங்கள் புனரமைப்பு செய்வதற்காக 4 கோடியே 61 இலட்சத்து 94 ஆயிரத்து 593 ரூபாவும், சிறுவீதிகள் புனரமைப்பதற்கு 8 கோடியே 26 இலட்சத்து 3 ஆயிரத்து 651 ரூபாவும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 9 கோடியே 22 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பொதுக்கட்டங்கள் பொது வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு 15 கோடியே 31 இலட்சத்து 52 ஆயிரத்து 841 ரூபாவும் ஆக மொத்தம் 37 கோடியே 41 இலட்சத்து 61 ஆயிரத்து 86 ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு பிரதேச செயலர் பிரிவில் சிறுவீதிகள் புனரமைப்புச் செய்வதற்கு 6 கோடியே 9 இலட்சத்து 9 ஆயிரத்து 227 ரூபாவும் பொதுக்கட்டடங்கள் அமைத்தல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்கு 26 கோடியே 27 இலட்சத்து 15 ஆயிரத்து 770 ரூபாவுமாக மொத்தம் 33 கோடியே 17 இலட்சத்து 24 ஆயிரத்து 997 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிற்கு பொதுக்கட்டடங்கள் அமைத்தல் புனரமைப்புச் செய்வதற்கு 7 கோடியே 9 இலட்சத்து 52 ஆயிரத்து 252 ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# சி.வி.இராஜசுந்தரத்தின் ஊடகத்துறை நூல்களை தேடிக்கற்று பயன்பெற வேண்டும்

## அவரது நினைவுக்குறிப்பில் முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன்

ஊடகத்துறைக்கு பெரும் பங்களிப்பு நல்கிய சி.வி.இராஜசுந்தரத்தின் ஊடகத்துறை நூல்களை இளைய தலைமுறையினர் தேடிப் பயனுற வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான என்.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

ஒலிபரப்பாளரும் ஊடகக்கல்வியாளருமான சி.வி இராஜசுந்தரம் பற்றிய நினைவுக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த நினைவு குறிப்பில் மேலும் குறிப்பிட்டதாவது, வானொலி ஊடகத்துறையில் சாதனைகள் படைத்த படைப்பாளியாகவும் ஊடகக்கலை ஆசிரியராகவும் ஆய்வாளராகவும் ஞானமுள்ள நிர்வாகியாகவும் சாதனைகள் படைத்த அமரர் சி.வி. இராஜசுந்தரம் அவர்கள் அண்மையில் புலம்பெயர் வாழ்விடை காலமான செய்தி கனமானது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ் சேவையின் மேலதிக பணிப்பாளராகவும் இலங்கை வானொலி நிலைய பயிற்சிக்கூட தலைவராகவும் இவரின் அனுபவ ஞானம், தமிழ் வானொலி உலகில் தரமான படைப்புக்களையும் ஊடகப்படைப்பாளிகளையும் உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

மேலான ரசனையும் நிறைந்த ஆங்கிலப் புலமையும் கொண்ட இவர், அவர்கள் தேசத்தின் கலை ஆளுமைகளை இனங்கண்டு அவர்களுடன் கூட்டுழைப்பின் பயனாய் பல படைப்புக்களை உருவாக்கியவர்.

ஒலிபரப்பாளரும் ஆக்க இசைக்கலைஞருமான எஸ்.கே. பரராஜசிங்கம், ஒலிபரப்பாளர் சுந்தா சுந்தரலிங்கம், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் க.கைலாசபதி, கவிஞர் முருகையன், ஒலிபரப்பாளர் வி.என். பாலசுப்பிரமணியம் என நீளும் ஆளுமைகளின் நட்பும் அனுபவப் பகிர்வும் இவரது ஊடகப் படைப்புக்களின் ஊட்டங்களாகின.

தமிழ்தந்த முருகன், இரவின் இதயம், சித்தம் அழகியார், இஞ்சியும் மஞ்சளும் போன்ற இவரது வானொலிச் சித்திரங்கள் தமிழ் ஊடக வரலாற்றில் அழியாத சித்திரங்கள். அந்நாட்களில் நாட்டிய நாடகங்களாக அரங்குகளில் புகழ்பெற்ற இவரது தயாரிப்புக்களான மீனாட்சி கல்யாணம், பாவைபெற்ற பரிசு போன்றவற்றின் கலைநயம் உயர்வானது.

பின்னைய காலங்களில் காட்சி ஊடகமான தொலைக்காட்சி சித்திரங்களின் தயாரிப்புக்களிலும் இவரது முத்திரை பதிந்திருந்தது. இந்த வகையில் பயணம், யாழ்தேவி, அந்த நிலையான புள்ளி போன்ற விபரணப் படங்கள் குறிப்பிடத்தக்கன.

படைப்பாளியாக விளங்கிய அதேவேளையில் ஊடகவியல் விரிவுரையாளராக அந்நாட்களில் ஊடகக்கல்வியை வழங்கிய ஒரே நிறுவனமாக களனிப் பல்கலைக்கழகத்தில் தொடங்கிய இவரது கற்பித்தல் அனுபவம் பின் நாட்களில் மிகச் சிறந்த ஊடக ஆய்வாளராக இவர் மிளிர துணையானது.

வியட்நாம், ஒல்லாந்து, நியூகினி, மாலைதீவு, பாகிஸ்தான், மலேசியா, கனடா போன்ற தேசப்பரப்பெல்லாம் உலகளாவிய ஊடகப் பயிலரங்குகளில் இவரது புலமைசார் பங்களிப்பு உணரப்பட்டது. குறிப்பாக கிராமிய மேம்பாட்டுக்கான வானொலி கலைத்திட்டம், சமுதாய மேம்பாட்டுக்கான பங்கேற்பு, தொடர் பாடல் பற்றிய பத்துக்கும் மேற்பட்ட இவரது நூல்கள் இன்றைய ஊடகக்கல்விக்கு பெரும் துணையாவன.

எனது வானொலி அனுபவக்களத்தில் இவரிடம் பெற்றுக்கொண்ட ஒலிபரப்புத் துறைப் பயிற்சியும் இவரது ஆக்கப்படைப்புக்களில் கலந்துகொள்ள கிடைத்த வாய்ப்புக்களும் என்றும் நெஞ்சில் நிலைத்திருப்பவை. இவரது வழிகாட்டலில் தமிழ் வானொலி ஊடகத்தில் குறிப்பிடத்தக்க ஆக்கங்களை நானும் படைக்க முடிந்தது.

இன்றைய ஊடகத் தலைமுறையினரால் பெருமளவுக்கு அறியப்படாத இவரின் சாதனைகளை போற்றுதல் நம் கடமை.

இன்று முதன்மை பெறும் ஊடகக்கல்வித் துறையினர் சி.வி. இராஜசுந்தரத்தின் பெறுமதிமிக்க நூல்களை தேடிப் பயனுற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.



வவுனியா நகரசபையின் 90 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் நகரசபைக்குட்பட்ட பண்டாரிக்குளம் 2 ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு செய்யப்படுவதைப் படத்தில் காணலாம்.

## ஈராக்கில் கடந்த எட்டு ஆண்டுகளாக ஒரு இலட்சத்து62ஆயிரம் பேர் பலி

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி வீழ்த்தப்பட்டபின் அங்கு பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் தொடர் கதையாக இருந்து வருகின்றன. இதனால் பாதுகாப்பிற்கென அமெரிக்கா படைகள் முகாமிட்டுள்ளன. தற்போது அமெரிக்கப்படைகள் விலகிவரும் சூழ்நிலையில் அங்கு குண்டுவெடிப்புக்கள் சகஜமாகி வருகின்றன.

இந்நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஐ.பி.சி எனப்படும் தன்னார்வ தொண்டு நிறுவனம் (என்.ஜி.ஓ) நடத்திய ஆய்வில் ஈராக்கில் நடந்த பல்வேறு குண்டுவெடிப்பு மற்றும் பயங்கரவாத தாக்குதல்களில் கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஒரு இலட்சத்து 62 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 90 சதவீதம் பேர் அப்பாவி மக்கள். மீதமுள்ளவர்கள் பாதுகாப்புப் படையினர் எனவும் கடந்த 2008-2009ஆம் ஆண்டுகளில்தான் அதிக எண்ணிக்கையிலான உயிர்ப்பலி ஏற்பட்டுள்ளதென்வும் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

## இந்து,இஸ்லாமிய வழிபாட்டிடங்கள் குண்டுவீசி தாக்கப்பட்டதால் பரபரப்பு

நியூயோர்க்கில் இந்துக்கள் பூஜை செய்யும் இடம்,இஸ்லாமிய மையம் உட்பட 4 இடங்களில் நாட்டு வெடிகுண்டுகள் வீசித்தாக்குதல் நடந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அமெரிக்காவின் நியூயோர்க் அருகில் உள்ளது குயின்ஸ் நகரம். இங்கு நேற்று முன்தினம் இரவு 4 இடங்களில் அடுத்தடுத்து மர்ம ஆசாமிகள் நாட்டு வெடிகுண்டுகள் வீசித்தாக்குதல் நடத்தினர்.

இந்துக்கள் பூஜை செய்யும் இடம், அல்கோயி பவுண்டேசன் என்ற இஸ்லாமியர்கள் மையம் உட்பட 4 இடங்கள் மீது நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டதில் அங்கிருந்த பொருட்கள் சேதம் அடைந்தன. ஆனால் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. இந்தத் தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை என்று நியூயோர்க் மேயர் மைக்கேல் புளூம் பெர்க் கூறினார். அவர் மேலும் கூறுகையில், இதுபோன்ற தாக்குதல்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது. தாக்குதல் நடத்தியவர்கள் குறித்து தீவிர விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். (அ-2)

## ஆப்கானில் சித்திரவதைக்குள்ளான சிறுமி மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா வருகை

ஆப்கானிஸ்தானில் மாமியார் மற்றும் மைத்துனியால் கொடுமையாக சித்திரவதை செய்யப்பட்ட 15 வயது சிறுமிக்கு இந்தியாவில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்படும் என அந்நாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.




ஆப்கானிஸ்தானினி வட கிழக் பகுதியில் உள்ள பாக்லான் மாகாணத்தில் சாகர்குல் என்ற 15 வயது சிறுமி பாலியல் தொழிலுக்கு உடன்பட மறுத்ததால் அவரின் மாமியார் மற்றும் மைத்துனி இருவரும் சேர்ந்து அவரை ஆறுமாதங்களாக பூமிக்கடியிலுள்ள அறை ஒன்றில் அடைத்து வைத்தனர்.

அத்தோடு குல்லின் கை நகங்களை ஒவ்வொன்றாக பிடிங்கியும், விரல்களை உடைத்தும், தலை முடியை பித்தும், பல்வேறு விதமாக சித்திரவதை செய்துள்ளனர். இத்தகவல் வெளியான பின் அச்சிறுமியை அதிகாரிகள் மீட்டு காபூலில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.


இந்நிலையில் மூத்த பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்துப் பேசிய ஜனாதிபதி ஹமீத் கர்சாய் சிறுமியைக் கொடுமைப்படுத்தியோர் தண்டிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார். (அ-2)

## ஆத்திரமூட்டும் கருத்துக்களை கூறவேண்டாம்; வடகொரியாவுக்கு தென்கொரியா எச்சரிக்கை



(சியோல்)

ஆத்திரமூட்டும் வகையிலான கருத்துக்களை தெரிவிக்க வேண்டாம் என்று வடகொரியாவை தென்கொரிய ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.



வடகொரியா தனது அணு ஆயுத ஆராய்ச்சியை கைவிட்டால் பேச்சு நடத்தத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் ஜனாதிபதியாக இருந்த கிம் ஜோங்இல் கடந்த மாதம் காலமானார். இதையடுத்து அவரது மகன் கிம்ஜோங் உன் இராணுவத்தின் உயர்அதிகாரியாகவும் ஆளும் கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் வட கொரிய அரசு வெளியிட்டுள்ள புத்தாண்டு செய்தியில், உயிர் இருக்கும் வரை கிம் ஜோங் உன்னுக்கு பக்கபலமாக இருப்போம். இராணுவத்தின் வலிமையை அதிகரிப்போம் என்று தெரிவித்திருந்தது. இது தொடர்பாக தென்கொரிய ஜனாதிபதி லீ மியூங் பாக் தொலைக்காட்சியில் பேசியதாவது, இப்போது எழுந்துள்ள சூழ்நிலையால் கொரிய தீபகற்பத்தில் திருப்பு முனை ஏற்பட்டுள்ளது. மாற்றங்கள் நிலவி வரும் நிலையற்ற சூழ்நிலையில் புதிய சந்தர்ப்பங்களும் பேச்சு நடத்த உருவாக வேண்டும். வடகொரியா ஆத்திரமூட்டும் கருத்துக்களைத் தெரிவித்தாலோ செயல்களில் ஈடுபட்டாலோ தகுந்த பதிலடி தர தென்கொரியா தயாராக உள்ளது.

வடகொரியா அணு ஆயுதம் தயாரிப்பது தொடர்பான தனது ஆராய்ச்சியை நிறுத்திக் கொண்டால்தான் அதனுடன் மீண்டும் பேச்சு நடத்தப்படும். கொரிய தீபகற்பத்தின் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தலுக்கு தீர்வுகாண நாங்கள் தயாராக உள்ளோம். மேலும் 6 நாடுகளுடனான பேச்சுவார்த்தையை தொடங்கி வட கொரியாவுக்கு பொருளாதார ரீதியாகவும் உதவ நாங்கள் தயார் என்றார்.

2006 முதல் வடகொரியா 2 முறை அணு ஆயதங்களை சோதனையிட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட 6 நாடுகளுடனான பேச்சுவார்த்தை நிறுத்தி வைக்கப்பட்டது. வட கொரியா தனது அணு ஆயுத ஆராய்ச்சியை கைவிட வேண்டும். மேலும் முன்னர் ஒப்புக் கொண்டபடி ஆயுதங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் மீண்டும் பேச்சு நடத்த முடியும் என்று 6 நாடுகளும் தெரிவித்து விட்டன. (அ-2)

## ஏவுகணைகள் பரிசோதிப்பு

நீண்ட தொலைவு சென்று தாக்கும் 2 ஏவுகணைகளை ஈரான் நேற்று முன்தினம் சோதனை செய்தது.


எண்ணெய் வளம் நிறைந்த ஹார்மோஸ் பகுதியில் கடந்த சில நாட்களாக ஈரான் இராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டது.

கடைசி நாளான நேற்றுமுன்தினம் 200 கிலோமீற்றர் தொலைவு வரை பாய்ந்து தாக்கும் 2 ஏவுகணைகள் சோதனை செய்யப்பட்டன.

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக ஈரான் மீது ஐ.நா சபை பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இந்தவிவகாரம் தொடர்பாக ஈரான் மீது அமெரிக்க நேசப் படைகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில் தொலைதூர ஏவுகணை சோதனையை ஈரான் நடத்தியிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது. (அ-2)



பாகிஸ்தான் பெசாவரில் பெற்றோல் மற்றும் காஸ் விலை உயர்வைக் கண்டித்து மக்கள் அங்குள்ள வீதியில் கற்களை வைத்து மறியல் போராட்டம் செய்ததைப் படத்தில் காணலாம்.




## பாகிஸ்தான் மீது நடத்தும் தாக்குதலை நிறுத்திவிட்டு அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளை தாக்குக-தலிபான்களுக்கு அதன் தலைவர் உத்தரவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவம் மற்றும் மக்கள் மீது நடத்தப்படும் பயங்கரவாத தாக்குதல்களை உடனடியாக நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் மீது தாக்குதல் நடத்தும்படி ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் இயங்கி வரும் தலிபான்களுக்கு அவர்களின் தலைவர் முல்லா ஓமர் உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அரசு பாகிஸ்தானிய தலிபான்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் பாக் அரசு மற்றும் இராணுவத்துடன் ஒத்துழைக்கும் வகையில் தலிபான்களின் பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்து புதிய ஒருங்கிணைந்த குழு ஒன்றை தலிபான் தலைவர் ஓமர் உருவாக்கியுள்ளார்.

மொத்தம் ஐந்து பேர் கொண்ட இக் குழுவில் ஆப்கான், தலிபான், ஹக்கானி பயங்கரவாதக்குழு, மவுல்வி நஜீர் , ஹபீஸ் குல் பகதூர் ஆகியோர் தலமையிலான பயங்கரவாதக்குழுக்கள் பாகிஸ்தான் தலிபான் மற்றும் தெற்கு வசிரிஸ்தானில் இயங்கிவரும் மவுலானா வலியுர் ரஹ்மான் தலைமையிலான குழு ஆகியவை அடங்கியுள்ளன.

வடக்கு வசிரிஸ்தானில் இயங்கி வரும் பல்வேறு பயங்கரவாதக் குழுக்களை ஒடுக்கும்படி பாக். அரசுக்கு அமெரிக்கா நிர்ப்பந்தம் கொடுத்து வரும் நிலையில் இந்தக் குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளன.

மேலும் அமெரிக்கப் படைகளுக்காக உளவு பார்ப்பதாக சந்தேகப்படும் பாகிஸ் தான் நபர்களை கடத்திச் சென்று அவர்களை இரக்கமில்லாமல் கொல்ல செய்யும் போக்கையும் நிறுத்தும்படி பாகிஸ்தான் தலிபான்க ளுக்கு ஓமர் அறிவுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற படுகொலைகள், இஸ்லாத் திற்கு எதிரானவை எனக் குறிப்பிட்டுள்ள அவர் இவற்றை நிறுத்தாவிட்டால் த்ன்னை தங்களின் தலைவர் என சுட்டிக்காட்ட வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


ஓமரின் உத்தரவுகளை ஏற்று அதன்படி நடப்பதாக ஐவர் குழு உறுதியளித்துள்ளது.

இதையடுத்து வடக்கு வசிரிஸ்தானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானில் தலிபான்கள் ஒரு நோட்டீசை விநியோகித்துள்ளனர்.

அதில் அனைத்து பயங்கரவாதக் குழுக்களும் எதிர்வரும் காலங்களில் அப்பாவிகளை கடத்திக் கொலை செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுபோன்ற சம்பவங்களை இனி ஐவர் குழு விசாரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சர்வகட்சி நிபுணர் குழு அறிக்கையின் கதியும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் தலைவிதியும்



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கடந்த மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் நிமல் சிறி பாலடி சில்வாவினால், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.


அறிக்கையைப் படித்த அரசாங்கத்தின் தலைவர்கள் என்ன கற்றார்கள், சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவ்வறிக்கையின் அடிப்படைகளில் என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றார்கள். என்பன இன்னமும் தெளிவாக வில்லை.

ஆணைக்குழுவின் பெயர் எதுவாக இருந்தாலும் அதன் பெயரையும் அதற்குரிய நிபந்தனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சற்றுக் குழப்பமாகவே இருக்கிறது.

ஆணைக்குழுவின் பெயரின்படி அரை நூற்றாண்டிற்கு மேலாகிய இனப்பிரச்சினையின் வரலாற்றிலிருந்து நாடு என்ன கற்றுக்கொண்டுள்ளது என்றும் அவ்வாறு கற்றுக்கொண்ட பாடங்களின் பிரகாரம் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்றும் ஆணையாளர்கள் ஆராய வேண் டும்.

ஆனால், ஆணைக்குழுவிற்குரிய நிபந்தனைகளின்படி, ஆணையாளர்கள் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதிமுதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதிவரையிலான ஏழு ஆண்டு காலத்தில் இடம்பெற்றசம்பவங்களைமட்டுமே ஆராய்ந்து கற்ற பாடங்களையும் நல்லிணக்கத்திற்கான சிபார்சுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் வரலாற்றுப்பாடங்களைக் கற்க வேண்டுமானால், நாம் ஏன் அதற்கு 2002 ஆம்




ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதியை ஆரம்ப நாளாகக் கொள்ள வேண்டும்? இப்பிரச்சினை என்ன, அன்று தான் உருவானதா?

ஆணைக்குழுவும் இந்த விடயத்தை தமது அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளது. 2002 ஆம்ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் 2009 மே மாதம் 19 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற விடயங்களைப் பற்றியே ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றே ஆணைக்குழ பணிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, பல்வேறுபட்ட சமூகங்களின் பிரச்சினைகளுக்கு காரணமானவர்களின் ஆரம்பம் ஆணைக்குழுவிற்கான காலவரையறைக்கு முன்னரே தோன்றியிருக்கிறது என்பதையும் ஆணைக்குழு ஏற்றுக் கொள்கிறது. எனவே சாட்சியங்களைப் பெறும்போது, ஆணைக்குழு இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு ஓரளவு நெகிழ்வுத் தன்மையுடன் செயற்பட்டது என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, ஆணைக்குழுவிற்குரிய ஆராய்ச்சிக் காலப்பகுதி குழப்பமாகவேயுள்ளது. அதேவேளை ஆளும் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணியின் உறுப்புக் கட்சிகளின் கொள்கைகளும் இந்த ஆணைக் குழுவிற்கான ஆணையும் ஒத்துப் போவதாகத் தெரிவதுமில்லை.

அவ்வாணையின்படி, ஆணைக்குழு 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதிக்கு பின்னராக காலப்பகுதியொன்றையே ஆராய வேண்டும். ஏன் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி? அன்று நடந்த முக்கிய சம்பவம் தான் ரணில் விக்ரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தத்தில்



பிரபாகரன் கையொப்பமிட்டமை. (மறுநாளே ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டார்) 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதிக்கு பின்னரான காலப் பகுதியொன்றில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள் யாவர் என ஆராயுமாறு பணிக்கப்பட்டபோதும் யுத்த நிறுத்த உடன்படிக்கை தவறானதாக ஆணைக் குழு கூற வில்லை. அந்த உடன்படிக்கையின் தோல்விக்கு காரணமானவர்களையே அது ஆராய்ந்துள்ளது. அவ்வாறு செய்தமை பிழையென அரசாங்கத்தின் எவரும் கூறவில்லை. ஆளும் கூட்டணியின் கட்சி கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தனர்.

அவ்வாறு இருக்க, அக்கூட்டணியின் தலைமையிலான அரசாங்கம் ஆணைக் குழு நியமித்து போர் நிறுத்த உடன்படிக்கையின் தோல்விக்கான காரணங்களை ஏன் ஆராய வேண்டும்? உடன்படிக்கையின் தோல்வியே அவர்களின் பிரார்த்தனையாக இருந்தது. அவ் உடன்படிக்கையின் விளைவாகவே ஜனதிபதி சந்திரிக்கா குமாரதங்க 2004 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தை கலைத்து விட்டார்.

அவ்வாறாயின் ஏன் இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டது? ஆணைக்குழு நியமிக்கப்படுவதற்கு சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் அதாவது 2009 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அப்போது இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீமூனுடன் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். போர் முடிந்து ஒருவார காலத்திலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

சர்வதேச மனிதநேயம் மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மீறியது தொடர்பாக பொறுப்புக் கூறுதல் விடயமாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் வலியுறுத்தியதாகவும் அரசாங்கம் அது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி கூறியதாகவும் அவ்வறிக்கையின் இறுதியில் கூறப்பட்டுள்ளது. அதன்பிரகாரம்தான் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என அரசாங்கம் கூறவில்லை. ஏதோ தமக்கு நல்லிணக்கம் தேவைப்பட்டுத்தான் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது என்பது போல் அரசாங்கம் நடந்துகொண்டது.

ஆயினும், சர்வதேச ரீதியில் பொறுப்புக் கூறல் என்ற விடயம் வரும்பொழுதெல்லாம் அரசாங்கம் இந்த ஆணைக்குழுவையே தந்தது. எனினும் கௌரவப்பிரச்சினையாக எடுத்துக்கொண்டோ, என்னவோ ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடனான உடன்பாட்டின் அடிப்படையிலேயே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என்று கூற அரசாங்கம் விரும்பவில்லை.

எனவே, போரின் இறுதிக்கட்டம் என்று அரசாங்கம் ஏழு ஆண்டு காலத்தை எடுத்துக் கொண்டுள்ளது. "போரின் இறுதிக்கட்டம்" என்றால் என்ன என்று குறிப்பிட்ட வரையறையோ, வரைவிலக்கணமோ இல்லாத நிலையில் எவரும் எதையும் கூறவும் இல்லை. எவ்வாறு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டதோ அவ்வாறே அதன் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் 388 பக்கங்களைக்கொண்ட அறிக்கையை முழுமையாக வாசிக்காமல் அறிக்கை வெளியிட்ட நாளே, சிலர் தாம் முன்கூட்டியே மனதில் வைத்திருந்த கருத்துக்களை வெளியிட்டமையை காணக்கூடியதாக இருந்தது.

சிலர் போரின் இறுதி நாட்களின் மூன்று முக்கிய புலிகளின்தலைவர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தபோது, படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்ப வம் தொடர்பாக ஆணைக்குழு "தீர்ப்பு" வழங்கும் என்று எதிர்பார்த்திருந்தனர் போலும்.

அவ்வாறான தீர்ப்பொன்று அறிக்கையில் இல்லாததால் அவர்கள் அறிக்கையை முற்றாக நிராகரிக்க முற்பட்டிருப்பதையும் காணலாம்.

ஆனால், சரணடைந்த வேறுசில புலிகளின் தலைவர்களை படையினர் அழைத்துச் சென்று பின் அவர்களைக் காணவில்லையென்று கூறப்படுவது தொடர்பாக விசாரணை செய்ய வேண்டுமென்று ஆணைக்குழு கூறியிருப்பதை அவர்கள் கண்டுகொள்ளவில்லைப் போலும்.

"அரச வர்ணம்" ஆங்காங்கே காணப்பட்டாலும் ஆணைக்குழுவின் அறிக்கை இனப்பிரச்சினை தொடர்பான நல்லதோர் ஆராய்ச்சி ஆவணம் என்பதில் சந்தேகமில்லை.

அதேவேளை, அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுவதைப்போல், ஆணைக் குழு அப்பாற் சென்று அதிகாரப் பரவலாக்கலை வற்புறுத்தியுள்ளது. ஆணைக் குழுவின் ஆணையைப் பொறுத்தவரை நல்லிணக்கம் என்று வரும்போது அதற்கான ஒரேவழி அதிகாரப் பரவலாக்கல் தான் என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆயினும் ஆணைக்குழு அதிகாரப்பரவலாக்கத்தை வலியுறுத்தியுள்ளது.

எனவே, பாத்திரத்தில் அழுக்கு நீர் இருந்தாலும் அந்நீருடன் குழந்தையையும் கொட்டிவிடுவதா என்று அதிகாரப் பரவலாக்கலை ஆதரிப்போர் சிந்திக்க வேண்டியுள்ளது.

அரசாங்கம் ஆணைக்குழுவின் சிபார்சுகளை செயற்படுத்துமா என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. எல்லா சிபார்சுகளையும் செயற்படுத்த வேண்டுமென்றில்லையென மகிந்தசமரசிங்க சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அவ்வாறாயின் அரசாங்கம் எந்தெந்த சிபார்சுகளை நிறைவேற்றப் போகிறது எந்தெந்தவற்றை கைவிடப்போகிறது என்பது இப்போதைய கேள்வியாகும்.

ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இரண்டு நிபுணர்குழுக்கள் நீண்டநாள் ஆய்வுக்குப்பின் அதிகாரப் பரவாலாக்கலே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் என முடிவு செய்துள்ளன.

ஒன்று, ஜனாதிபதியின் முதலாவது பதவிக்காலதில் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவாகும் (ஏ.பி.ஆர்.சி). மற்றையது தற்போதைய நல்லிணக்க ஆணைக் குழுவாகும் (எல்.எல்.ஆர்.சி).

முதலாவது குழு, கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு சற்று முன்னர் அதன் அறிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது. அவ்வளவுதான். அக்குழுவின் தலைவராக இருந்த தற்போதைய சிரேஸ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இப்போது அதைப்பற்றிப் பேசுவதில்லை.

அதை நினைக்கும்போது அதிகாரப் பரவலாக்கலைப்பற்றி நல்லிணக்க ஆணைக் குழவின் சிபார்சுகள் எந்தளவிற்கு அரசாங்கத்தின் இரசனையோடு ஒத்துப்போகும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. ஒத்துப் போனால் நல்லது.

**எம்.எஸ்.எம் ஐயூப்**

# சங்கடங்கள் தீர்க்கும் சகுனங்கள்

✷ சூரிய உதயத்தைப் பார்க்கக்கூடாது. அதேபோல் அஸ்தமன சூரியனையும் பார்க்கக்கூடாது. **சூரியன்** நிரந்தரமானவர். சூரியன் கண்கண்ட தெய்வமாக இருந்தாலும் அவரையும் மேகங்கள் சில விநாடி மறைத்து வைத்துவிடும் இல்லையா? அதுபோல நாம் செய்யும் செயல் தடையில்லாமல் நடக்க வேண்டுமானால் சூரியன் முழுமையாக உதயமான பின்னர் சூரியனைப் பார்த்து சூரிய நமஸ்காரம் செய்தால் அரசாங்கத்தால் ஆதரவு ஏற்படும். அதற்காக உச்சி வெயிலில் சூரியனைப் பார்க்கப் போய்விடக்கூடாது.

✷ காலையில் எழுந்திருக்கும் போது நம் கண்களுக்கு நேராக சிறு தீபம் எரிந்தால் நல்லது. மின் விளக்காகக் கூட இருக்கலாம். வெளிச்சத்தை பார்த்து எழுந்தால்நன்மைகள் பல ஏற்படும் **ஜோதி வடிவமே** சுப சகுனம்.

✷ மொட்டை மாடியில் சிலர் தூங்குவார்கள். அப்படிப்பட்டவர்கள் சூரியனின் வெளிச்சம் மேலே படரும் வரை தூங்கக்கூடாது. அப்படி செய்தால் தரித்திரம் உண்டாகும். எந்தக் காரியம் செய்தாலும் தாமதம் ஏற்படும்.




✷ வீட்டில் இருந்து நெருப்பை தானம் கொடுக்கக் கூடாது. வீட்டில் இருக்கும் செல்வம் வெளியேறும். யாகம் செய்யும் போது அதில் இருந்து தீயை எடுத்து அடுப்பை பற்ற வைத்தால் அந்த இல்லத்தினர் மேன்மையான யோகத்தைப் பெறுவார்கள்.

✷ புது வீட்டிற்கு போகும் போது ஏற்கனவே பழைய வீட்டில் இருந்து தீபம் ஏற்றிக் கொண்டு செல்வதை விட புது வீட்டிற்கு வந்து வாசல் படியில் இருந்து தீபம் ஏற்றி புது வீட்டிற்குள் செல்வதே நல்லது.

ஓர் இடத்தில் இருந்து ஒரு செடியை வேரோடு பறித்து வேறு இடத்தில் நட்டு வைத்தால் சில சமயம் அது சரியாக வளராது. அதையே ஓர் இடத்தில் விதையை கொண்டு போய்ப் போட்டால் நன்றாக வளர்ந்து மரமாகும். அதுபோலத்தான் பழைய வீட்டில் இருந்து மகா இலட்சுமியை அழைத்து வருவதாக நினைத்து அந்த வீட்டில் இருந்து தீபம் ஏற்றி வருகிறார்கள். அதைவிட புது வீட்டின் வாசல்படியிலேயே தீபம் ஏற்றி எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தால் நிச்சயம் யோகம் ஏற்படும்.

✷ வெளியில் செல்லும் போது **கூந்தலை** விரித்துப்போட்டுக் கொண்டு யாராவது எதிரே வந்தால் அது நன்மை இல்லை. அப்படி யாராவது உங்கள் எதிரில் வந்தால் சிறிது நேரம் கழித்து.செல்லலாம். அதே சமயம் **கூந்தலை** விரித்து இருந்தாலும் அதில் பூச்சூடி வந்தால் நன்மையே.

பெண்கள் வீட்டில் தலைமுடியை விரித்துப் போட்டுக் கொண்டு இருக்கக்கூடாது. பிரச்சினை ஏற்படும். நம்முடைய ஒவ்வொரு அங்கத்திலும் இறைவனும் தேவதைகளும் இருக்கிறார்கள். தலைமுடியில் பரிசாராக தேவதை இருப்பதாக சாஸ்திரம் சொல்கிறது. தலையை விரித்துப் போட்டுக் கொண்டு இருந்தால் கவலைகள் ஏற்படும். **பெண்கள் தலையில் பூச்சூடி இருக்க வேண்டும். அது சுப சகுனமாகும்.** சுவாமி இராமானுஜரின் தாயார் கோயில் வாசலில் தான் இருக்கும் போது பெண்கள் யாராவது பூச்சூடாமல் வந்தால் தன் செலவில் அந்தப் பெண்களுக்கு பூ வாங்கிக் கொடுப்பாராம். பெண்கள் பூச்சூடினால் தான் மனதில் சந்தோஷம் ஏற்படும். மனதில் சந்தோஷம் இருந்தால் தான் வாழ்க்கையில் ஏற்றம் இருக்கும் என்று தன் கணவரிடம் கூறுவாராம் சுவாமி இராமானுஜரின் தாயார் .தலையில் பூ வைத்திருப்பவர்கள் எதிரே வந்தால் நன்மை ஏற்படும்.



சுப காரியங்கள் பேசும் போது கூந்தலை அவிழ்த்துவிட்டு வரக்கூடாது.

வீட்டில் எப்போதும் தலையைச் சொறிந்து கொண்டே இருக்கக்கூடாது.

உணவு பரிமாறும்போது தலை முடியை விரித்து போட்டுக் கொண்டு பரிமாறக்கூடாது.

வீட்டுக்குள் சுவர் ஓரத்தில் உதிர்ந்த தலைமுடி சுற்றிக் கொண்டு இருந்தால் சனீஸ்வர பகவானின் ஆதிக்கம் அந்த வீட்டைத் தாக்கும்.

✷ வீட்டில் ஒட்டடை தொங்கக்கூடாது. அது நல்ல சகுனம் இல்லை. கிருஷ்ண பரமாத்மாவின் வீட்டில் ஏதோகாரணத்தால் கிருஷ்ணரின் அறையை சரியாகப் பராமரிக்காமல் இருந்தார்கள் பணியாளர்கள். சமையலறையும் அலங்கோலமாக இருந்தது. சாதத்தில் புழு பூச்சிகள் ஊர்ந்து கொண்டு இருந்தன. அதை அறிந்த கிருஷ்ண பரமாத்மா ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று தெரிந்து கொண்டார். எந்த அளவுக்கு நாம் குடி இருக்கும் வீடு சுத்தமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இலக்சுமி கடாட்சம் ஏற்படும். அந்த இல்லத்தில் வசிப்பவர்களுக்கு நல்லவை தடையில்லாமல் நடக்கும்.(தொடரும்)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## துளசியின் வகைகளும் மருத்துவ குணங்களும்

துளசியில் 8 வகைகள் உண்டு.
அவையாவன,
வெண்துளசி
கருந்துளசி
எலுமிச்சம் துளசி
நாய்த்துளசி
கல்துளசி
காட்டுத்துளசி
பேய்த்துளசி
நிலத்துளசி

என்பன்வாகும். இவ் எட்டுவகையும் கற்பூர வாசனை கொண்டவை. இலை ஒவ்வொன்றும் வெவ்வேறுவகைமருத்துவகுணங்களைக் கொண்டவை. இவற்றுள் காட்டுத்துளசிக்கு




கஞ்சாங்கோரை என்ற பெயரும் பேய்த்துளசிக்கு கழுதைத்தும்பை என்னும் பெயரும் கருந்துளசிக்கு கிருஷ்ணதுளசி என்னும் பெயரும் உண்டு. துளசி மிகச்சிறந்த கிருமி நாசினி ஆகும். கோவில்களில் துளசி தளிரையும் துளசி கலந்த நீரையும் தருவதற்கு காரணம் தொற்றுக்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதேயாகும்.

வீடுகளில் துளசிமாடம் அமைத்து கிருஷ்ண துளசி எனும் கருந்துளசியை வளர்த்தால் நச்சுப் பூச்சிகள், தொற்று நோய்க்கிருமிகள் ஆகியவை வராமல் பாதுகாக்கும் என்பதே ஒரு காரணமாகும்.

✷ துளசி ஊறவைத்து நீரைப் பருகினால் தாகம் அடங்கும். பசி உண்டாகும். இரத்தம் சுத்தமடையும். சளி, இருமல் தணியும்.

### கருந்துளசி
### Botanical Name:-Ocimum sanctum

✷ கருந்துளசி இலைகளை இடித்து பிழிந்தெடுத்த சாற்றில் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து தினம் இருவேளை அருந்தினால் நெஞ்சில் கட்டியுள்ள சளி இளகி வெளியேறும்.

✷ கருந்துளசி இலைகளை ஆவியில் வேகவைத்து சாறு பிழிய வேண்டும். அதில் 10 முதல் 20 துளிகள் வரை ஒரு வயதுக் குழந்தைகளுக்கும் அரைத்தேக்கரண்டி துளசிச்சாற்றை 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் கொடுக்க மார்புச் சளி இளகி இருமல் குணமாகும்.

✷ கருந்துளசி இலையை இடித்துப்பிழிந்து சாறு எடுக்க வேண்டும். அதில் 2 தேக்கரண்டி எடுத்து காய்ச்சிய பசுப்பாலில் கலந்து 40 நாட்கள் பருகி வர இருதயம் பலப்படும்.

✷ கருந்துளசி இலைகளை இடித்துப் பிழிந்தசாறு இரு தேக்கரண்டி எடுத்து காய்ச்சிய ஆட்டுப் பாலில் கலந்து 40 நாட்கள் தொடர்ந்து பருகிவந் தால் ஈரல் நோய்கள் நீங்கி ஈரல் வலிமை பெறும்,பசி உண்டாகும்.

✷ அன்றாடம் அதிகாலை 5 முதல் 10 கிராம் வரை உள்ள கருந்துளசி இலைகளை மென்று தின்ன வேண்டும். அவ்வாறு செய்தால் இரத்தத்திலுள்ள நச்சுக்கிருமிகள் அழியும். இரத்தம் சுத்தமாகும். மார்புச்சளி நீங்கும்.




✷ கருந்துளசி இலைச்சாறு 100 கிராம், கற்கண்டுத்தூள் 100 கிராம் ஆகியவற்றை சர்பத் பதமாக காய்ச்சி வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை பசுவின் பாலில் கலந்து அருந்த மூளை சுறுசுறுப்பு அடையும்.

✷ கருந்துளசிச்சாறு ஒரு தேக்கரண்டி, 30 மில்லி சீரகக் குடிநீரில் கலந்து தினமும் இருவேளை அருந்த பெண்களிற்கு ஏற்படும் மாதவிலக்கு கோளாறுகள் நீங்கி மாதவிலக்கு சீராகும்.

✷ மாதவிலக்கு அடிக்கடி ஏற்படுதல், மாதவிலக்கு ஏற்படும் நாட்களுக்கு முன்பும் பின்பும் வயிற்று வலி ஏற்படல் என்பவற்றிற்கு நாள்தோறும் கருந்துளசி இலையை இடித்து பிழிந்து சாறு எடுத்து 30 மில்லி அளவு உட்கொள்ள வேண்டும்.

### எலுமிச்சம் துளசி
### Botanical Name:-Ocimum gratissimum

எலுமிச்சம் துளசி இலைகளை செப்புப் பாத்திரத்தில் இட வேண்டும். அதில் நீர் ஊற்றி இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். அதிகாலை வெறும் வயிற்றில் அந்த நீரை அருந்த வேண்டும். இவ்வாறு செய்தால் பித்தாதிக்கமும் பித்தத்தினால் ஏற்படும் நோய்களும் தீரும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

✷ எலுமிச்சம் துளசிச்சாற்றை சீரகக்கசாயத்தில் ஒரு தேக்கரண்டிக்கு 30 மல்லி அளவு அருந்த ஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

✷ எலுமிச்சை துளசி இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்த தூளை நீராடும் போது உடலில் தேய்த்து சில நிமிடம் ஊற வைத்து நீராடினால் தோல் நோய்கள் குணமாகி உடலில் ஒருவித மினுமினுப்பு உண்டாகும்.

(தொடரும்)

# இந்திய மீனவர்கள் மீது வழக்கு விசாரணைகள்

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் கடந்த இரு வார காலப்பகுதிக்குள் மீட்கப்பட்டிருக்கும் 35 இந்திய மீனவர்களதும் வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததும் முறையே அவர்கள் தமது சொந்த நாட்டிற்கு அனுப்பிவைக்கப்படுவரென கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

மீன்பிடித்தலுக்கான பயிற்சியின் போது படகுகள் சேதமாகிய நிலையில் உயிருக்குப் போராடி தத்தளித்த 29 இந்திய மீனவர்களையும் தானே சூறாவளி காரணமாக இலங்கை கடல் எல்லைக்குள் கரையொதுங்கியிருந்த ஆறு இந்திய மீனவர்களையும் கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டு அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவ வசதிகளை முன்னெடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட 35 இந்திய மீனவர்களும் மேலதிக விசாரணைக்காக அவர்கள் மீட்க்கப்பட்டுள்ள கடல் பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததும் இம் மீனவர்கள் முறையே அவர்களது சொந்த நாட்டிடம் ஒப்படைக்கப்படுவரெனவும் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

அதேவேளை தானே சூறாவளி காரணமாக காணாமற்போன 21 இந்திய மீனவர்களை தேடிக்கண்டுபிடித்து தருமாறு இந்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இதுவரை ஆறு மீனவர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களையும் உயிருடன் மீட்கலாம் என்ற நம்பிக்கையில் வடக்கு, கிழக்கு, வடமத்திய கடற்படை முகாம்களைச் சேர்ந்த கடற்படையினர் வடக்கு, கிழக்கு கடற்பரப்பில் தொடர்ந்தும் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும்

## வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பரிந்துரைகளையும் அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரியுள்ளார்.

இந்த அறிக்கையில் சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் நாட்டின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் அறிக்கை அமைந்துள்ளது. யுத்தம் தொடர்பில் வெளியான முழுமையான அறிக்கையாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை கருத முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான ஒரு வழிகாட்டல் நூலாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை கருத முடியும் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில தரப்பினர் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ரிசானா தொடர்பில் கலந்துரையாட தூதுக்குழு மீண்டும் சவுதிக்கு விஜயம்

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசானா நபீக்கை விடுவிக்கும் நோக்கில் அவரால் உயிரிழந்ததாகக் கூறப்படும் குழந்தையின் உறவினர்களைச் சந்திப்பதற்கு இலங்கைத் தூதுவர் குழுவொன்றை மீண்டும் அந்த நாட்டிற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தாம் உள்ளிட்ட குழுவினர் அடுத்த வாரம் சவுதி அரேபியாவிற்கு செல்லவுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் சவுதி அரேபியாவிற்கு சென்ற போது ரிசானா நபீக்கினால் உயிரிழந்ததாக கூறப்படும் குழந்தையின் பெற்றோரை சந்திப்பதற்கு இலங்கைப் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இதன்போது உயிரிழந்த குழந்தையின் தந்தை ரிசானாவை விடுதலை செய்வதற்கு தனது விருப்பத்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை உயிரிழந்த குழந்தையின் தாயுடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மின்சாரசபை ஊழியர்களின் சம்பளத்தை பதினைந்து வீதமாக உயர்த்த கோரிக்கை

## அல்லது சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாவிடின் சேவைகளை இடைநிறுத்துவதாக இலங்கை மின்சார சபையின் • ஒன்றிணைந்த தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தொழிற்சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சன் ஜயலால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை முன்னுதாரணமான நாடாக மாற்றுவதற்கான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற 16 ஆயிரத்து 964 மின்சார சபை ஊழியர்களின் சம்பளத்தை 15 வீதமாக உயர்த்த முடியாது எனத் தெரிவித்தால் அதுவொரு சமூக சேவைத்திணைக்களமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து வரி அறவிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 27 நாட்களை புரட்சிகரமான நாட்களாக பிரகடனப்படுத்தவுள்ளதாகவும் பிரதான செயலாளர் ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டார்.

பாரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சேவைகளை இடைநிறுத்த உள்ளதாகவும் தெரிவித்த அவர் இயலுமாயின் பலவந்தமாக அதிகாரத்தை பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு கூறுவதாக தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் பொலிஸாரை ஈடுபடுத்தி மின்சார சபையின் சேவையினை வழங்குமாறு இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# கையடக்க தொலைபேசி திருடியவர் கைதானார்

(கொழும்பு)

காலி முகத்திடலில் திட்டமிட்ட வகையில் கையடக்க தொலைபேசிகளை திருடிவந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 12 வயதான ஒருவரின் கையடக்க தொலைபேசியை திருடிய சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பின்னர் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்மூலம் அவர் நீண்டகாலமாக சிறுவர்களை அச்சுறுத்தி கையடக்கத் தொலைபேசிகளை கொள்ளையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தலவாக்கலை லந்துலை பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# காணிகளை இழந்த மக்கள்குறித்த தகவல்களை சேகரிப்பதற்கு ஆய்வு

## காணி அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)


வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணிகளை இழந்த மக்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு ஆய்வு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக இந்தத் தகவல்கள் திரட்டப்படவுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக காணிகளை இழந்த அனைவருக்கும் அரசாங்கத்தின் ஊடாக காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தனியார் காணிகளுக்கும் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இரண்டு வருடங்களுக்குள் அனைத்து பகுதிகளிலும் உள்ள காணிகளுக்கு சட்டபூர்வமாக உறுதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



ஜே.டி.எம். நிறுவன மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாஞ்சலி நிகழ்வு அண்மையில் சாவகச்சேரியில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.சயந்தன்)

# மாகாணங்களுக்கான அதிகாரங்களை பகிர்ந்தளிக்க அரசாங்கம் தவறியுள்ளது



## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணும் என்பதில் நம்பிக்கை இல்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவடைந்த போதிலும் ஆளும் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தமிழ் மக்களின் யதார்த்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முனைப்பு காட்டத் தவறியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

13 ஆம் திருத்தச்சட்ட மூலத்திற்கு அமைவாக மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க அரசாங்கம் தவறியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல்கள் கால தாமதமின்றி உடனடியாக நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் வடமாகாண சபை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடமாகாணசபை நிறுவப்பட்டால் பிரதேச மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என அவர் தெரிவித்துள்ளார். அரசியல் நோக்கங்களுக்காகவே அரசாங்கம் வட மாகாணசபைத் தேர்தல்களை காலம் தாழ்த்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு எதிர்பார்த்தளவு நன்மைகள் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தகதியான வாகனங்களில் மருந்துப் பொருட்கள் கொண்டு செல்லப்பட வேண்டும்

(கொழும்பு)

மருந்துப்பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பதிவு செய்யும் நடவடிக்கையை கட்டாயமாக்குவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

மக்களுக்கு உரிய தரத்தினைக் கொண்ட மருந்துப்பொருட்களை விநியோகிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் பணிப்பாளர் டாக்டர் கேமந்தபெரேரா குறிப்பிட்டார்.

தகதியான வாகனங்களில் மருந்துப் பொருட்கள் கொண்டு செல்லப்படாத காரணத்தால் அவற்றுக்கு பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாக அவர் கூறினார்.

கடந்த காலங்களில் அவ்வாறான 20 வாகனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தச்சட்டம் நடைமுறையிலுள்ள போதிலும் அது உரிய முறையில் பின்பற்றப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# புரட்சிகரமான சுகாதார சட்டங்களை பாராளுமன்றில் நிறைவேற்ற திட்டம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சுகாதாரத்துறையில் பாரிய செல்வாக்கு செலுத்தக்கூடிய சுகாதார சட்டங்கள் பல எதிர்வரும் இருமாத காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாட்டின் சுகாதாரத் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் பல இடம் பெறவுள்ள ஆண்டாக 2012 அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாண்டு புது வருடத்தின் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி சுகாதார அமைச்சில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வமத வழிபாடுகளின் பின்னர் புது வருடத்திற்கான அரச ஊழியர் பிரகடனம் செய்து கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், சுகாதார அமைச்சிலே பணியாற்றுவோர் தாம் அறிந்த மட்டில் மணித்தியாலத்திற்கு தமது சேவை வரையறுக்கப்பட்டவர்கள் அல்லர்.

அதுமாத்திரமன்றி நாம் மருத்துவமனைகளை எடுத்துக்கொண்டாலும் அதில் பணியாற்றுவோர் 24 மணி நேரமும் தமது சேவையினை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளனர்.

இந்த ஆண்டிலே நிறைவேற்றப்படவுள்ள சட்ட திட்டங்கள் மூலம் இலவச மருத்துவ வசதிகள் மேலும் பலப்படுத்தப்படும். மேலும் சுகாதாரத்துறையின் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளும் பெற்றுத்தரப்படும்.

இதன்மூலம் இலவச மருத்துவ வசதிகளை மேலும் பலப்படுத்தி இந் நாட்டின் வைத்தியசாலைகள் கட்டமைப்பின் ஊடாக பொதுமக்களுக்கு உச்ச சேவையினை பெற்று கொடுப்பதே தமது ஒரே குறிக்கோளாகும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார். (அ-2)

# உயர்தர பரீட்சையின் மீள் மதிப்பீட்டுக்கு மாணவர்களிடம் பணம் அறவிடக்கூடாது

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீள் மதிப்பீடு செய்வதற்கு மாணவர்களிடமிருந்துபணம் அறவீடு செய்யக்கூடாது என பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட தவறு ஒன்றுக்காக மாணவர்களிடம் பணத்தை அறவீடு செய்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் ஒரு பாடப் பெறுபேறினை மீள் மதிப்பீடு செய்வதற்காக அரசாங்கம் மாணவர்களிடம் தலா 250 ரூபாவினை அறவீடு செய்ய திட்டமிட்டுள்ளதுடன் தபால் அல்லது உபதபால் அலுவலகங்களில் இதற்கான கொடுப்பனவுகளை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பரீட்சை பெறுபேறுகளில் குழறுபடிகள் உள்ள நிலையில் இவ்வாறு கட்டணங்களை அறவீடு செய்து மீள் மதிப்பீடு செய்வது மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியீட்டில் கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் திருப்தி அடைய முடியாது எனவும் அவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# கொள்கைகளை விமர்சிக்க முடியாது



(கொழும்பு)

அரச ஊழியர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சனம் செய்ய முடியாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களின் பணத்தில் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் அரச ஊழியர்கள் அரசாங்கத்தை விமர்சனம் செய்யக்கூடாது எனவும் அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டு மென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


**சந்நிதியான் ஆச்சிரம் சைவகலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும்**

**வருடாந்த திருவாசக விழா-2011**

காலம்:- 06.01.2012 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில்
இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
ஆசியுரை:- நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
சிறப்புச் சொற்பொழிவு - பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
வாராந்த வெள்ளி நிகழ்வு:- மறவனூர் T.M வாசகர் குழுவினரின் மங்கள இசை
குறிப்பு:- ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப்படங்களும், திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக எடுத்து வரப்படும். அறுபத்து மூவர் குருபூசையும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.
(7212)


# மக்களின் தேவைகள் குறித்து டக்ளஸ் கலந்துரையாடல்

வலி.மேற்கு பிரதேச பொதுமக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்துரையாடினார்.

அவ்வப் பிரதேசங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்து வரும் மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதன் மூலம் அம்மக்களின் வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்தும் இச்சந்திப்பு நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அப்பகுதி மக்களால் பல்வேறு தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக வீட்டுத் திட்டக் கோரிக்கைகள் மற்றும் குறையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளை முழுமையாக்கும்படியிலான கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டன.

இம்மக்களது பிரச்சினைகள் பல வெகுவிரைவில் நிறைவேற்றப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் உறுதியளித்தார். அத்துடன் உடனடியாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் வழங்கினார்.

யாழ்.குடாநாட்டில் நிலவுகின்ற மின்சாரம் தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்று அதேநாளில் நடைபெற்றது.

அடிக்கடி மின்தடை ஏற்படுதல், மின் வலு குறைந்தளவில் விநியோகிக்கப்படல் மற்றும் தெரு விளக்குகள், மின் விநியோகத் துண்டிப்புகள், புதிதாக மின் இணைப்புக்களை வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது இணக்கமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

மின் கட்டணம் உரிய முறையில் செலுத்தாதவர்கள் தொடர்பில் அவர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டு ஓரிரு தினங்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவசியம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சுட்டிக் காட்டினார்.

இதற்கும் பொதுவான இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் மற்றும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் பிரியந்த குணதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)


ஈழத்துச் சிதம்பர சிறப்பம்சம்

**ஈழத்து சிதம்பரத்தில் அருளாட்சி செய்கின்றான்**

ஊணளித்த வேடனுக்கும் உயரன்பின் காரணமாய்
வானளித்து நல்ல கதி வழங்கிநின்ற அருட் கொடையான்
எப் பெயரைச் சூட்டிடினும் எவ்வுருவம் காட்டிடினும்
செப்ப முயர் அன்பிருந்தால் தேடி வந்து தாங்கிடுவான்
இல்லாத இடமில்லை ஈசனவன் திருப்பார்வை
சொல்லாத இடமில்லை சிவமயமே அண்டமெலாம்
எல்லோருக்கும் வழிகாட்டி வாழ்வளிக்கும் ஈசனவன்
ஈழத்து சிதம்பரத்தில் அருளாட்சி செய்கின்றான்

மதுரகவி.காரை எம்.பி அருளானந்தன்

இன்று (2012.01.04) திருவெம்பாவை 6 ஆம் நாள்
விளம்பர அனுசரணை: சிவனடியான் (சி-5411)

# விலைக்கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டால் கறுப்புச் சந்தைமூலம் மருந்து உள்நுழையும்

## மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனம்

(கொழும்பு)

இலங்கையில் மருந்துப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்பட்டால் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும். அதேநேரம் கறுப்புச் சந்தை மூலம் இலங்கைக்கு மருத்துவ பொருட்கள் உள்நுழைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுமென இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மருந்து பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள விதிமுறைகளுக்கு முழுமையான ஆதர்வை இலங்கை மருந்தாக்கல் கைத்தொழல் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும் மருந்துவகைகளுக்கான கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்படுமாயின் ஏற்படும் விளைவுகளையும் மேற்படி சம்மேளனம் தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பாக அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு சம்மேளனம் எதிரானவர்கள் அல்ல.

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் மிகச்சிறந்த மருத்துவ சேவைக்கு இந்த விலைக்கட்டுப்பாடு மூலம் எதிர் நிலை தாக்கங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம். தற்போது நடைமுறையிலுள்ள திட்டத்துக்கு அமைவாக நோயாளிகளுக்கு அரசாங்க வைத்தியசாலைகளில் இலவசமாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் நியாயமான விலைகளுக்கும் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுதவிர இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் நியாயமான விலைகளுக்கு மருந்துகளை தனியார் மருந்தகங்களில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தற்போதைய திட்டங்கள் உள்ளன என தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்பட்டால் அது விலையை அதிகரிப்பதற்கு காரணமாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டால் அது பல்வேறு வகையான பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்பதுடன் சந்தையில் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப் பாட்டை தோற்றுவிப்பதற்கான சாத் தியக் கூறுகளும் நிலவுமென சம் மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர நாட்டின் தேவைக்கேற்ப மருந்துப் பொருட்களின் இறக்குமதி நிலவாத பட்சத்தில் விலைகள் அதிகரிக்கக் கூடும். விலை கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டால் மருந்துப் பொருட்கள் விநியோகிப்பவர்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும்.

இத்தகைய பாரதூரமான விளைவுகள் ஏற்படும் போது கறுப்பு சந்தை மூலம் இலங்கைக்கு மருத்துவ பொருட்கள் உள்நுழைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். (அ-2)

## கைக்குண்டு வெடித்து சிறுவன் பலி

அக்கரைப்பற்று பிரதேச வெற்றுக்காணி ஒன்றில் கிடந்த கைக்குண்டு ஒன்றை பந்து என எண்ணி எறிந்து விளையாடிய போது அது வெடிப்புக்குள்ளானதில் சிறுவனொருவன் உயிரிழந்ததுடன் மற்று மொரு சிறுவன் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

பதூர்நகர் பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள வெற்றுக் காணியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இந்தசம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பதூர்நகரைச் சேர்ந்த நிலாஸ் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். அதே பிரதேசத்தைச் சேர்ந்த இக்கினாஸ் (வயது 16) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-5)

# மக்களுக்காக தொடர்ந்தும் போராடுவேன்–தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

ரெடிக்கல்வாதிகளை பயன்படுத்தி அரசாங்கத்தை மாற்ற இந்த வருடத்திலாவது கட்சியின் தலைமைத்துவத்திற்கு ஞானம் பிறக்கட்டும் என பிரார்த்திப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தாம் உள்ளிட்ட கட்சியை கட்டியெழுப்புவதற்காக செயற்பாடுகளை முன்னெடுத்தவர்களை சிலர் ரெடிக்கல்வாதிகள் என குறிப்பிட்ட தில் தவறில்லை எனவும் இவர்கள் புதிதாக சிந்தித்து புதிய சவால்களை ஏற்றுக்கொள்பவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில்நடைபெற்றஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்: தாம் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் கடுமையான போராட்டக்காரர்கள் அல்ல எனவும் தாங்கள் அமைதியான முறையில் போராடுபவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது தொகுதி அமைப்பாளர் பதவி பறிக்கப்படவுள்ளதாக சில ஊடங்களில்செய்திகள்வெளியாகி இருந்ததாகவும் அது குறித்து தனக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை எனவும் தனது பதவி பறிக்கப்பட்டாலும் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டாலும் மக்களுக்காக தொடர்ந்தும் போராடப் போவதாகவும் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

எந்த சவால்கள் வந்தாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும்.

தொடர்ந்து போராடப் போவதாகவும் அரசாங்க த்தில் இணை ந்து பதவிகளை பெற்றுக்கொள் ளும் எந்த எண்ணமும் தனக்கில்லை எனவும் நாடாளு மன்ற உறுப்பினர் மேலும் தெரிவித் துள்ளார். (அ-2)

# 2012 இல் நாணய மதிப்பிறக்கமில்லை

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

சென்மதி நிலுவை நெருக்கடி தோன்றும் நிலைமை காணப்படுவதால் சந்தையில் ஊகச் செயற்பாடுகள் காணப்படும் நிலைமையிலும் இலங்கை நாணயத்தை மதிப்பிறக்கம் செய்யும் உத்தேசம் மத்திய வங்கிக்கு இல்லையென மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரதுக்குக் கேடு தரக்கூடிய வகையில் மலிவான பொருட்கள் இறக்குமதியாவதை தடுப்பதற்கு நெகிழ்ச்சியான நாணய மாற்றுமுறையொன்று தேவையென திறைசேரிச் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர கூறியது தொடர்பிலே ஆளுநர் இவ்வாறு கூறினார்.

2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாணய மதிப்பிறக்கம் செய்யப்படலாமென்ற ஊகத்தினால் ஏற்றுமதியாளர்கள் அமெரிக்க டொலரை நாட்டுக்குள் கொண்டு வருவதை தள்ளிப் போடுகின்றனர். இதேசமயம் இறக்குமதி செய்வோர் டொலரை வாங்குவதில் ஆர்வமாகவுள்ளனர். இதனால் ரூபாவுக்கான மதிப்பு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. (அ-2)


Jaffna College Institute of Agriculture

"Registered with Tertiary & Vocational Education Commission under P 25 / 0026"

Estb : 1973
Regd No : VS/Br/324

Phone : 021 321 4571, 021 224 1420
E.mail : jcagriinstitute@yahoo.com

JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

விவசாயப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.

பதிவிலக்கம் TVEC-P25/ 0026

✦ புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சி நெறி
✦ க.பொ.த.(சாதாரணம்/ உயர்) தரம் கற்ற அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும்
✦ 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலருக்குமான இலவச பயிற்சி நெறி
✦ பயிற்சி பெறும் காலத்தில் உதவுதொகை வழங்கப்படும்
✦ நூலகம், கணனி, ஆய்வுகூட வசதிகளை உள்ளடக்கியது
✦ உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெறவும் ஏற்ற பயிற்சி நெறி

விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி

விவசாய மூலதத்துவம், பயிர் வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல், உணவு பதனிடல், ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய ஒரு வருடகால பயிற்சி நெறி.

விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி

விவசாய மூலதத்துவம், பயிரியல், விலங்குவேளாண்மை, பூங்கனியியல், உணவு பதனிடல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய 4 மாத பயிற்சி நெறி

டிப்ளோமா பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 10.01.2012 இலும் சான்றிதழ் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 12.01.2012 இலும் காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு
அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி
விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

தொ.இல.: 0213214571, 0212241420
மின்னஞ்சல்: jcagriinstitute@yahoo.com

(7219)


# வலி.தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் வீதிக்குப்பெயர் மாற்றம்

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்டதும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குள் அமைந்துள்ளதுமான பின்வரும் வீதிகளுக்குப் புதிதாக பெயரிட/ பெயர் மாற்றம் செய்து பதிவு செய்வதற்கு பொது அமைப்புக்களிடமிருந்து கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. இப்பெயர் மாற்றம் தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் வலி. தென்மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்துக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்பின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வீதியின் அமைவிடம்/ பழைய பெயர் | கிராம சேவையாளர் பிரிவும் இலக்கமும் | வீதிக்கு இடப்படவுள்ள வீதியின் பெயர் |
|---|---|---|---|
| 01 | பற்றிமா வீதியில் ஆரம்பித்து சேந்தாங் குளம் வீதியில் முடிவடைகிறது | பண்டத்தரிப்பு (J/146) | சுவாமி விவேகானந்தா வீதி |
| 02 | தியான இல்ல வீதியில் ஆரம்பித்து சண்டிலிப்பாய் விளான் பிரதான வீதியில் முடிவடைகிறது | பண்டத்தரிப்பு (J/146) | வண.பிதா ஜெலான் வீதி |
| 03 | மடத்தடி ஒழுங்கை, சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் மத்தி (J/142) | இராஜ ராஜேஸ்வரி அம்பாள் வீதி |
| 04 | ஆஸ்பத்திரி வீதி, பிரான்பற்று | பிரான்பற்று (J/147) | கலைமகள் வீதி |

திரு.அ.ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி/3424)

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.

~ டால்ஸ்ராய்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# துரியோதனனிடம் தூது சென்ற கிருஸ்ணாவும் இலங்கைக்கு வரும் எஸ்.எம்.கிருஸ்ணாவும்

குருசேஷ்திரப் போர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கிருஸ்ண பரமாத்மா துரியோதனனிடம் தூது செல்கிறார்.

துரியோதனனிடம் தூது சென்ற அந்த கிருஸ்ணனின் நோக்கம் போரை நிறுத்துவதல்ல.

மாறாக போரை நடத்தி பாண்டவருக்கு உரிமையைப் பெற்றுக் கொடுப்பதே அவரின் இலக்காக இருந்தது.

அதற்காக கிருஸ்ணன் செய்த இராஜதந்திரங்கள் ஏராளம். போரைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பாண்டவர் சபை ஆராய்கிறது.

எங்கள் தமிழ் அரசியல் தரப்புகள் போல ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்து–அறிக்கை.

சகாதேவன் மட்டும் போரை நிறுத்துவதற்கான வழியைத் தெரிந்து கொள்கிறான்.

போரை நிறுத்துவதற்கான உபாயம் என்ன என்பதை போரின் சூத்திரதாரியான கிருஸ்ணனிடமே கூறிவிடுகின்றான்.

போரை நடத்துவதை உள்நோக்கமாகக் கொண்ட கிருஸ்ணன் குருசேஷ்திரத்தில் பார்த்தனுக்கு சாரதியாக இருந்து பகவத்கீதையையும் தந்து, போரையும் நடத்தி முடித்தான்.

அந்த கிருஸ்ணா; உரிமை மறுக்கப்பட்ட பாண்டவர்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக துரியோதனனிடம் தூது சென்றார்.

ஆனால் இங்கோ, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இலங்கைக்கு வருகிறார். அவரின் வருகை தமிழர்களுக்கு உரிமை பெற்றுக் கொடுப்பதற்காக அல்ல.

மாறாக வன்னி யுத்தத்தில் எல்லாவற்றையும் இழந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமரும் குடும்பங்களுக்கு இந்திய அரசினால் அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகளை கையளிப்பதற்காகவே இவர் வருவதாகக் கூறப்படுகின்றது.

ஓ! கிருஸ்ணா என்றாலே பிரச்சினை போல் தான் தெரிகிறது.

போரை நடத்தி, கர்ணனை வீழ்த்தி அவன் உயிரை பறிப்பதற்காக அந்தணர் வேடம் தாங்கி கர்ணன் செய்த புண்ணியப் பேற்றை உதிரத்தின் வழி பெற்ற கிருஸ்ண நாமம் அங்கே.

இங்கோ, இலங்கை அரசு வன்னியில் போரை முன்னெடுப்பதற்கான அத்தனை உதவிகளையும் புரிந்து, போர்க்களத்தில் சிக்குண்ட தமிழ் மக்களை காப்பாற்றுவதைக் கூடத் தவிர்த்து மௌனம் காத்து நாடகம் நடித்த இந்திய அரசு இப்போது வீடு கட்டிக் கொடுக்கிறது. அந்த வீட்டைக் கையளிக்க எஸ்.எம்.கிருஸ்ணா இங்கே வருகிறார்.

வீட்டைக் கையளிக்க மட்டும்தான் வருகிறாரா? அல்லது இலங்கை அரசு சீனாவோடு சேர்ந்து இந்தியாவை ஆபத்துக்குள் வீழ்த்திவிடும் என்ற அச்சத்தில் வருகிறாரா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆனால், இவ்விடத்தில் இந்திய தேசத்திடம் பெற வேண்டிய உதவிகளைப் பெற்று வன்னிப் போரில் வெற்றியும் பெற்று அதற்குப்பின் இந்தியாவை உதறித் தள்ளி சீனாவுடன் நட்புறவை ஏற்படுத்தி இந்தியாவை கெஞ்சவைக்கும் பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உண்டு என்பதை மறுத்துவிட முடியாது.

எஸ்.எம்.கிருஸ்ணா அல்ல; எவர் வந்தாலும் இலங்கை–சீன நட்புறவை தடுக்கவே முடியாது.

ஆக, ஈழத் தமிழருக்கு இந்தியா இழைத்தவற்றுக்கான தண்டனையை இலங்கை அரசிடம் இருந்தே இந்தியா அனுபவிக்கப் போகிறது என்பதை நினைக்கும் போது,

ஹரே கிருஸ்ணா! ஹரே கிருஸ்ணா! எஸ்எம் கிருஸ்ணா என்றுதான் பாடத் தோன்றுகிறது.

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அறநிதியச் சபையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல் துறை தலைவர் கலாநிதி செல்வி சகுந்தலாதேவி அம்பிகைபாலனும் சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் க.உமாபதி, துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

அன்னையின் பிறந்தநாள் அறக்கொடையினை யாழ். போதனா வைத்தியசாலை என்பு முறிவு பிரிவுக்கான வைத்திய நிபுணர் க.உமாபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கான நிதி வடபிராந்திய சுகாதாரத் திணைக்கள வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் வழங்கப்படவுள்ளது.

சிவத்தமிழ்செல்வி கல்வி நிதியம் 2012 இனால் துணுக்காய் வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரத்தில் கல்வி கற்கும் திறமையான பொருளாதாரத்தால் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்கான கல்வி நிதியானது துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றனிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வின்போது சிவத்தமிழ் விருது வழங்கலும் இடம்பெறவுள்ளது. இவ்விருதினை இளைப்பாறிய அதிபர் மூதறிஞர் சிவசரவணவன் எம்.ஏ., இளைப்பாறிய சுகாதார பரிசோதகர் பொன்னையா செல்லப்பா, சைவ சமயப் பௌராணிகர் பண்டிதை திருமதி சிவபாக்கியம் பாலநாதன், தினகரன் செய்தியாளரும் புகைப்பட கலைஞர் எஸ்.கதிரவேலு, சிற்பக் கலைஞர் ஏ.வி. ஆனந்தன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-2)

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து நிபுணர்குழு விடயங்களை ஆராய்ந்தது

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்கவிடம் விடயங்களை ஆராய்ந்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய மாவட்ட ரீதியான நிரப்பப்படுத்தலில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர்பில் அவரிடம் விரிவாக விசாரிக்கப்பட்டதாக குழுவின் தலைவர் தாரா விஜேதிலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாம் உள்ளிட்ட நிபுணர் குழுவின் பிரதிநிதிகள் குழு நேற்றையதினம் பத்தரமுல்ல பெலவந்தையில் அமைந்துள்ள பரீட்சைகள் திணைக்களத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் முன் வைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பிலும் நிபுணர் குழு விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

பரீட்சைப்பெறுபேறுகள் தொடர்பில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நிபுணர் குழுவின் தலைவர் மேலும் கூறினார். (அ-2)

## திருவெம்பாவை 06



திருச்சிற்றம்பலம்

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றாலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானே வந்து எம்மை தலையளிதாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய், உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடலோர் எம்பாவாய்

*தோழியர்:- மானின் பார்வையை போன்ற பார்வையை கொண்டவளே!நாளை வந்து உங்களை எழுப்புகின்றேன் என்று நேற்று நீ சொல்லிவிட்டு அதை இன்று மறந்து விட்டாயா? பொழுது இன்னும் விடியவில்லை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாயா? பக்தர்களை தானே வலியவந்து காப்பாற்றும் உயர்ந்த எண்ணம் கொண்ட சிவபெருமானின் திருவடியை நாங்கள் புகழ்ந்து பாடுகின்றோம். ஆனால் நீ வீட் டின் கதவைத் திறக்காமலும் சொன்ன சொல்லை மறந்ததற்கு வருத்தப்படாமலும் இருக்கிறாய்? எல்லோருக்கும் தலைவனான சிவபெருமானை பாடி மகிழ்ச்சி அடையலாம். உடனே எழுந்து வா என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.*

**(இன்று திருவெம்பாவை ஆறாம் நாள்)**

# மீள்குடியேறியோருக்கு காணி அனுமதிப்பத்திரம்


(வவுனியா)

வவுனியாவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 425 பயனாளிகளுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாக வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு இணக்க வடமாகாண காணி ஆணையாளரின் விசேட அனுமதியின் கீழ் காணி கச்சேரி மூலமாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## *உண்மையான மகிழ்ச்சி*



உங்கள் தவறுகளைப் பெரும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.

அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.

தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்ய முடியாமல் போய்விடும். ஆனால் அமைதியானவனோ சிறப்பாக பணியாற்றுவான்.

மன்னிக்கக்கூடியதும் சம நோக்குடையதும் நிலை தடுமாறததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

# தேசியக் கொடியை அவமதித்த குற்றத்திற்காக ஹசாரே மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(சென்னை)

தேசியக் கொடியை அவமதித்த குற்றத்துக்காக அன்னா ஹசாரே மீது கடும் நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றில் சட்டத்தரணி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றில் அவர் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது, தேசியக் கொடிக்காக பல இலட்சம் பேர் இன்னுயிரை இழந்து இந்தியாவுக்கு சுதந்திரத்தை பெற்றுத் தந்தனர். அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் நமது தேசியக் கொடியை ஒவ்வொருவரும் மதித்து நடப்பது அவசியமாகும். தேசியக் கொடியின் பெருமை காக்கப்படவேண்டும்.

எனவே, 2003 ஆம் ஆண்டில் திருத்தச் சட்டத்தின் படி தேசிய கொடியை அவமதித்தால் அந்த நபருக்கு அபராதமோ அல்லது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையோ அல்லது 2 தண்டனைகளையும் சேர்த்தோ விதிக்கலாம் என்று சட்டம் திருத்தப்பட்டது.

அவமதிப்பு

தற்போது ஊழலுக்கு எதிராக போராடுவதாகக் கூறி அன்னா ஹசாரே கூட்டம் சேர்த்து வருகிறார். ஊழலுக்கு எதிராக அவர் நடத்தும் போராட்டத்துக்கு நான் எதிரானவன் அல்ல. அவர் அந்த போராட்ட திட்டங்களை மேற்கொள்ளலாம்.

அன்னா ஹசாரே கலந்து கொள்ளும் கூட்டங்களில் மூவர்ண தேசியக் கொடி அவமதிக்கப்படுகிறது. தேசிய கொடியை பறக்க விடுவது, வெளிக்காட்டுவது போன்ற செயலை ஒழுங்குபடுத்துவதற்கென்று இந்திய தேசியக் கொடி விதிகள் 2002 என்ற விதிகள் உள்ளன. இந்த விதிகள் அனைத்தும் அவரது கூட்டங்களில் மீறப்பட்டுள்ளன.

கடந்த டிசம்பர் 18 ஆம் திகதி அன்னா ஹசாரே சென்னைக்கு வந்து நடத்திய கூட்டத்தில் தேசியக் கொடி தவறாக பயன்படுத்தப்பட்டது. சிலர் அதை பெட்சீட் ஆகவும் சிலர் அதை கைக்குட்டை ஆகவும் சிலர் அதை குளிருக்கான சால்வையாகவும் பயன்படுத்தினர்.

நடவடிக்கை

மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக உள்ளன. எனவே, அன்னா ஹசாரே மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மத்திய மற்றும் தமிழக உள்துறை செயலாளர்களுக்கு உத்தரவிட வேண்டும். இந்த வழக்கின் விசாரணை முடியும் வரை தேசியக் கொடியை அன்னா ஹசாரே பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வருகிறது.

(அ-2)




# அறிவியல் துறையில் இந்தியாவை சீனா முந்தியுள்ளது-மன்மோகன்

அறிவியல் துறையில் இந்தியாவை சீனா முந்தியிருப்பதாக பிரதமர் மன்மோகன் கூறியுள்ளார்.

ஒரிசா மாநிலம் புவனேஸ்வரில் 5 நாட்கள் நடைபெறும் 99ஆவது தேசிய அறிவியல் மாநாட்டை பிரதமர் மன்மோகன் சிங் நேற்று ஆரம்பித்து உரைநிகழ்த்தினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியலாளர்கள் மத்தியில் அவர் பேசுகையில், கடந்த சில தசாப்தங்களாக உலக அளவில் அறிவியல் துறையில் இந்தியா பின்தங்கியிருக்கிறது. சீனா போன்ற நாடுகள் நம்மை முந்திவிட்டன.

எனவே, இந்தத்துறையில் அதிக கவனமும் முதலீடும் அவசியமாகிறது. அறிவியல்துறையில் 2017ஆம் ஆண்டில் இந்தியாவின் முதலீடு இருமடங்காக உயர்த்தப்பட வேண்டும்.

நம்மிடம் உள்ள பின்னடைவுகளில் மாற்றம் ஏற்பட்டு வந்தாலும் நாம் திருப்திகொள்ள முடியாத நிலையில்தான் இருக்கிறோம் என்றார்.

பெங்களூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்சில் ரூபா 5 ஆயிரம் கோடி செலவில் தேசிய அளவிலான சூப்பர் கம்ப்யூட்டிங்கில் ஆய்வு மையம் அமைப்பதற்கான பரிந்துரையை மத்திய அரசு ஆய்வு செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழகத்தின் தேனியில் நியூட்ரினோ அப்சர்வேட்டரி ஒன்றை ரூ ஆயிரத்து 350 கோடி செலவில் அமைப்பதற்கான திட்டமும் பரிசீலனையில் உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆபாச வீடியோக்கள் குறித்த சட்டத்திற்கு வங்காளதேச அமைச்சரவை ஒப்புதல்

(தாகா)

ஆபாச வீடியோக்களைத் தயாரிப்போர் மற்றும் பரப்புவோருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்க வகை செய்யும் புதிய சட்டத்திற்கு வங்கதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வங்கதேசத்தில் சமீபத்தில் அந்நாட்டின் பிரபல நடிகைகள் இருவர் நடித்த ஆபாச வீடியோக்கள் வெளியாகின. இதையடுத்து அந்த வீடியோ காட்சிகள் அடங்கிய வி.சி.டி., டி.வி.டிக்கள் விற்பனை எகிறியது. இந்நிலையில் ஆபாச வீடியோக்கள் தயாரிப்பு மற்றும் பரப்பலைத் தடுக்க வகை செய்யும் புதிய சட்டத்திற்கு வங்கதேச அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்தது.

இச்சட்டத்தின்படி, ஆபாச வீடியோக்களைத் தயாரிப்பேர், தயாரித்து வைத்திருப் போர், ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் மற்றும் பரப்புவோருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் மூன்று இலட்ச ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். (அ-2)

# தானே புயலில் பாதிக்கப்பட்ட பகுதிகளை கலைஞர் நேரில் சென்று பார்வையிடுகின்றார்



(சென்னை)

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தி.மு. க. தலைவர் கலைஞர் இன்று நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறவுள்ளார்.

இதுதொடர்பாக தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி.மு.க. தலைவர் கலைஞர் தனது திருவாரூர் தொகுதி மற்றும் தானே புயலாலும் கடும் மழையினாலும் பாதிக்கப்பட்டுள்ள கடலூர், விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கடும் சேதத்திற்குள்ளான பகுதிகளை பார்வையிட இன்று முதல் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய மாநில அரசுகள் உடனடியாக ஆற்ற வேண்டிய பணிகளை எடுத்துக்கூறி அரசின் மூலம் ஆவன செய்தி வழிவகுக்கவும் எந்தவித உதவியும் அற்ற அல்லற்படும் ஏழை எளிய மக்களுக்கு தி.மு.க. அமைப்புக்கள் துணை புரிவதற்கான வழிவகைகளை காணவும் இந்தப்பயணத்தை கலைஞர் மேற்கொள்கிறார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# ஈழத் தமிழ்க் குழந்தைகள் அரச விடுதியில் தங்கி நின்று படிக்க அனுமதி

## தமிழக அரசு உத்தரவு

ஈழத்திலிருந்து அகதிகளாக தமிழகம் வந்துள்ள ஈழத்தமிழர்கள் தமிழகத்திலுள்ள பல்வேறு அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அவர்களின் குழந்தைகள் அந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வருகிறார்கள்.

இப்படி முகாம்களில் தங்கியுள்ளவர்களின் குழந்தைகள் உயர் கல்விக்காக வெளியூரில் சென்று தங்கிப்படிப்பதற்கு வசதிவாய்ப்புகள் இல்லாத நிலையில், எங்களின் குழந்தைகளை அரசு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளில் தங்கி படிப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று ஈழத்தமிழர்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து வந்தனர்.

அந்தக் கோரிக்கையை ஏற்று தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரச மற்றும் அரச உதவிபெறும் பாடசாலைகளில் கற்று வரும் ஈழத்தமிழர்களின் குழந்தைகளை இனி அந்த மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலும் சேர்ந்து படிக்கலாம் என்று தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி சேலம் மாவட்டத்தின் உள்ள ஈழத்தமிழர்களின் குழந்தைகள் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள விடுதிகளில் தங்கி படிப்பதற்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகுமாறு சேலம் மாவட்ட ஆட்சியர் மகரபூசனம் தெரிவித்துள்ளார். (அ-2)

# கடவுச் சீட்டுக்கள் அடங்கிய பொதி சுங்க இலாகா அதிகாரிகளால் மீட்பு

(புதுடில்லி)

டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் 100 கடவுச் சீட்டுகள் அடங்கிய பொதி ஒன்றை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இச் சர்வதேச விமான நிலையத்தில் துர்க்கீஸ் ஏர்லைன்ஸ் என்ற விமானத்தில் சுங்க இலாகா அதிகாரிகள் வழக்கம் போல் சோதனை செய்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் ஒரு பொதி இருந்ததை அவர்கள் கண்டனர். அந்தப்பொதியை திறந்து பார்த்தபோது அதில் 100 கடவுச்சீட்டுகள் இருந்ததைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தக்கடவுச்சீட்டுகளில் சில இந்தியர்களுக்கு சொந்தமானவை என்றும் ஏனையவை வெளிநாட்டினருக்கு சொந்தமானவை என்றும் அவர்கள் கூறினர். (அ-2)

# உள்நாட்டு மற்றும் எல்லைப் பாதுகாப்பிற்காக அதிகளவான உலங்குவானூர்திகள் கொள்வனவு

(புதுடில்லி)

இந்தியாவின் எல்லைப்பகுதியினை வான்வழியாக கண்காணிக்கவும் உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்தவும் கூடுதலாக உலங்குவானூர்தி கொள்வனவு செய்யவுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து ஆங்கில நாளிதழில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது,

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பினை பலப்படுத்தவும் எல்லைப் பகுதிகளை கண்காணிக்கவும் இந்திய எல்லைப் பகுதி இந்தியா-பாக், இந்தோ-வங்கதேசம், இந்தோ-சீனா என பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியினை எல்லைப் பாதுகாப்புப் படை இந்தோ-திபெத் எல்லைப் படை ஆகிய பிரிவினரும் மத்திய கம்பனிகள் படையும் கண்காணித்து வருகின்றன.

இப்பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுப்பதிலும் தாக்குதல்களை முறியடிப்பதிலும் செயற்பட்டு வருகின்றனர். அதேபோன்று உள்நாட்டு பாதுகாப்பிற்கென தேசிய பாதுகாப்புப்படை உள்ளது.

இந்நிலையில் எல்லைப்பகுதியினை வான்வழியாக கண்காணிக்கவும் ஊடுருவலை தடுத்திடவும் கூடுதலாக பிரக உலங்குவானூர்தி கொள்வனவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 6 உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இவை மலைப் பிரதேசங்களில் இந்திய எல்லையில் பறந்து கண்காணிக்கவும் வீரர்களுக்கு தேவையான ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டதாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது. (அ-2)



பிரபல இந்திய பத்திரிகை தைனிக் ஜாக்ரணின் பூரன் சந்திரகுப்தாவின் நூற்றாண்டு விழா அண்மையில் டில்லியில் கொண்டாடப்பட்டது. விழாவில் பூரன் குப்தா பற்றிய நூலை பிரதமர் மன்மோகன்சிங் வெளியிட்டதைப் படத்தில் காணலாம்.

# சதமடித்தனர் கலிஸ், பீற்றர்சன் தென்னாபிரிக்கா வலுவான நிலையில்

(கேப்படவுன்)

ஜக்கலிஸ், பீற்றர்சனின் அபார ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்கா அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற டெஸ்ட் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் தொடர் நேற்று கேப்டவுனில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் திலகரட்ன டில்சான் முதலில் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்க அணியை அழைத்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு தலைவர் சிமித் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹசிம் அம்லாவும் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சோபிக்க தவறினார். அடுத்து பீற்றர்சனுடன் இணைந்த ஜக்கலிஸ் பொறுப்பாக ஆடி நம்பிக்கையளித்தார். இந்த ஜோடியில் அபார இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி வலுவாக முன்னேறியது

இதில் பீற்றர்சன் 59 பந்துகளிலும் ஜக்கலிஸ்42 பந்துகளிலும் அரைச்சதம் அடித்து கை கொடுத்தனர்.

இந்த ஜோடியின் கம்பனி ஆட்டத்தை பிரிக்க இலங்கை அணித்தலைவர் திலகரட்ன டில்சான் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்கவில்லை.

இதில் ஜக்கலிஸ் 114வது பந்தில் தனது 41வது டெஸ்ட் சதத்தையும்பூர்த்தி செய்தார்.



மறுமுனையில் பீற்றர்சனும் 165 பந்துகளில் தனது 2வது சதத்தைப் பெற தென்னாபிரிக்கா அணி 250 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 205 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த போது பீற்றர்சன் 188 பந்துகளில் (13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 109 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஏ.பி.டி வில்லியர்ஸ் நிதானமான ஆட்டத்தை வழங்கினார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா அணி முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக்கலிஸ் 159 ஓட்டங்களையும் ஏ.பி.டி வில்லியர்ஸ் 45 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் வெலகெதர ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# சிறிலங்கா கிரிக்கெட்டின் புதிய தலைவராக உபாலி தர்மதாஸ

(கொழும்பு)

சிறிலங்கா கிரிக்கெட்டின் புதிய தலைவராக உபாலி தர்மதாஸ போட்டியின்றி தெரிவாகியுள்ளார். ஏழு வருடங்களின் பின் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பதவிக்கு வந்த முதலாவது தலைவராக உபாலி தர்மதாஸ உள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் போது பொறுப்பிலிருந்த இடைக்கால சபையின் முன்னாள் செயலாளரான நிசாந்த ரணதுங்க சிறிலங்கா கிரிக்கெட்டின் செயலாளராக தெரிவாகியுள்ளார்.

அஸங்க செனவிரத்ன, கே.மதிவாணன் ஆகியோர் போட்டியின்றி உப தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொருளாளராக நுஸ்கி மொஹமட் ஏற்கென்வே போட்டியின்றித் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா 191 ஓட்டங்களுடன் சுருண்டது



(சிட்னி)

அவுஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது டெஸ்டில் முன்னணி வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தினால் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 191 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அத்துடன் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்றைய ஆட்டத்திலும் தனது நூறாவது சதம் பெறும் வாய்ப்பை தவறவிட்டு ஏமாற்றமளித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது போட்டி நேற்று சிட்னியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 191 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அணித்தலைவர் மகேந்தர சிங் தோனி 57 ஓட்டங்களையும் சச்சின் டெண்டுல்கர் 41 ஓட்டங்களையும் சேவாக் 30, அஸ்வின் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பற்றின்சன் 4 விக்கெட்டுக்களையும் ஹில் பென்ஹயூஸ், சிடில் தலா 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த பொன்டிங்-கிளார்க் ஜோடி நிதானமாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 116 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 47 ஓட்டங்களையும் ரிக்கி பொண்டிங் 44 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் வீழ்த்தப்பட்ட மூன்று விக்கெட்டுக்களையும் சகிர்கான் கைப்பற்றினார். இப் போட்டியின் இரண்டம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஒலிம்பிக் போட்டிகளில் சூதாட்டத்தை தடுக்க புலனாய்வுப்பிரிவு மூலம் கண்காணிப்பு

இலண்டனில் இவ்வாண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் முடிவுகளை முன்கூட்டியே நிர்ணயம் செய்வதை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரிட்டனின் விளையாட்டத்துறை அமைச்சர் ஹயூ ராபர்ட்ஸன் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் விளையாட்டுகளில் முதல் முறையாக உலகளவில் இந்தப் போட்டிகள் மீது பந்தயங்கள் கட்டப்படுவதை கண்காணிக்க ஒரு சிறப்பு புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிலும் குறிப்பாக ஆசியாவில் நடைபெறும் சட்டவிரோத சூதாட்டச் செயல்பாடுகள் தான் ஒலிம்பிக் போட்டிகளின் நற்பெயருக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய மிகப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்றும் ராபர்ட்ஸன் கூறியுள்ளார்.

உலகளவில் சட்டவிரோத சூதாட்டத் தொழிலில் ஆண்டொன்றுக்கு 140 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு பணம் புழங்குகிறது என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவிக்கிறது. மேலும் ஊக்க மருந்து பயன்பாட்டை விட சர்வதேச விளையாட்டுகளுக்கு கேடு ஏற்படுத்தக்கூடிய வல்லமை சட்ட விரோத சூதாட்டத் தொழிலுக்கு உள்ளது என்றும் ஐ.ஓ.சி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே தான் இதுவரை இல்லாத வகையில், சந்தேகத்தக்கு இடமளிக்கும் வகையில் போட்டிகளின் மீது பந்தயங்கள் கட்டப்படும் போது அவற்றை கண்காணிக்க ஒரு பிரிவு ஏற்படுத்தப்படுவதாக பிரிட்டனின் விளையாட்டுத்துறை அமைச்சர் கூறுகிறார்

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் ரக்கர் இது தொடர்பில் ஒரு உயர்மட்ட செயலணியை அமைத்துள்ளதாகவும். அதில் தானும் ஒரு அங்கமாக இருப்பதாகவும் ஹயூ ராபர்ட்ஸன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்களை இப்படியான விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் முன் நிறுத்திய அனுபவமும் தங்களுக்கு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் போது சட்டவிரோத மான வகையில் போட்டிகளின்மீது பந்தயங்களை கட்டும் நோக்கில் கூட்டணி அமைத்து செயல்படும் வாய்ப்புகளும் அதிகமாக உள்ளதாக தாங்கள் கவலைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகளின் போது சட்ட விரோத மான வகையில் சூதாட்டம் இடம் பெறுவதை தடுக்க பிரிட்டனின் மாநகர பொலிஸார் சர்வதேச பொலிஸ் அமைப்பான இண்டர் போலுடன் சேர்ந்து செயல் படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளின் போது ஊழலை தடுக்க தங்களால் முடியும் என்பதை காட்ட பிரிட்டிஷ் அரசாங்கம் ஆர்வமாக உள்ளதுஎன்றும் ஹயூ ராபர்ட்ஸன் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஆசிய நாடுகளுக்கு அப்படியான வல்லமை இல்லை என்பதை மென்மையாக சுட்டிக்காட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஒலிம்பிக்போட்டிகளின் போது ஒரு ஆட்டத்தின் மீது முழுமையாக பந்தயம் கட்டப்படுவதற்கு அப்பால் இடையிடையே ஒரு குறிப்பிட்ட சமயத்தில் போட்டி எப்படிஇருக்கும் என்பது தொடர்பில் அதிக அளவில் பணம் பந்தயமாக கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் போட்டியை நடத்தும் ஏற்பாட்டாளர்கள் மிகவும் விழிப்பாக இருக்க நேரிடும்.

# யாழ்.வரும்...

செயற்பாடுகள் தொடர்பாகவும் கடும் அவதா னத்துடன் இருக்குமாறு புலனாய்வுப் பிரிவி னர் வடக்கிலுள்ள பாதுகாப்பு உயர் அதிகாரி களுக்கு அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் முன்னாள் புலிப் போராளிகளை தூண்டிவிட முயற்சித்தவர்களுக்கு படையினர் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. .

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை ஒன்றிணைத்து மீண்டும் விடுதலைப்புலிகள் அமைப்பை ஆரம்பிக்க புலிகளின் சர்வதேச வலையமைப்பு இரகசியமாக மேற்கொண்டுவரும் திட்டம் குறித்த தகவல்கள் பாதுகாப்புத் தரப்பினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இணையம் மற்றும் கையடக்கத் தொலைபேசி வசதிகள் கிடைத்துள்ளதால் லக்ஸம்பேர்க்,ரொரன்ரோ, ஒஸ்லோ ஆகிய நகரங்களில் இருந்து செயற்படும் புலிகளின் சர்வதேச தலைவர்கள் ஏனைய புலி உறுப்பினர்களுடன் தொடர்ந்தும் உரையாடி வருவதாக தெரியவந்துள்ளது எனவும் திவயின தெரிவித்துள்ளது. (பா)

# விடுதலைப்புலி...

தபால் திட்டத்தின் ஒரு பகுதி அல்ல.

அவை பிரெஞ்சு தபால் அலுவலகங்களில் விற்கப்படுவதும் இல்லை.

எனினும் பிரெஞ்சு தபால் சேவையான லா போஸ்ட்டில் சில நிபந்தனைகளின் கீழ் குறிப்பிட்ட அளவு பிரத்தியேக முத்திரைகளை வாடிக்கையாளர்கள் அச்சிட்டுக் கொள்ளும் முறை உள்ளது. இந்த வசதியை பயன்படுத்தியே தனி நபர்கள் சிலர் இவ்வாறான முத்திரைகளை அச்சிட்டுள்ளனர்.

இந்த முத்திரைகளுக்கான கட்டளை கொடுக்கப்பட்டபோது,அவை உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதை அதிகாரிகள் கவனிக்க தவறிவிட்டனர் என்பதை லா போஸ்ட் உணர்ந்துள்ளது.

2006ஆம் ஆண்டு பயங்கரவாத இயக்கமாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் எல்.ரி.ரி.ஈ பட்டியல் படுத்தப்பட்டமை குறித்து பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ள நிலையில்,இந்த முத்திரைகள் மேலும் அச் சிடப்பட மாட்டாதுஎனவும்லாபோஸ்ட் உறுதியளித்துள்ளது.

பிரெஞ்சு தபால் சேவையின் ஒரு பகுதியாகவுள்ள குரூப் லா போஸ்ட் 1991 முதல் சுயாதீனமான, கைத்தொழில் மற்றும் வர்த்தக நிறுவனமாகவுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா-11)

## போர் அனுபவ...

தீவிரவாதத்தைத் தோற்கடித்த இலங்கையின் அனுபவங்கள் என்ற பெயரில் போர் அனுபவப் பகிர்வுக் கருத்தரங்கு ஒன்று கடந்த ஆண்டு மே மாதம் இராணுவத்தினால் கொழும்பில் நடத் தப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இந்தக் கருத்தரங்கைப் புறக்கணிக்குமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் உலக நாடுகளைக் கேட்டிருந்தன.

இதனால் இலங்கை அரசினால் அழைப்பு விடுக்கப் பட்ட பல் நாடுகள் இந்தக் கருத்தரங்கைப் புறக்கணித்திருந்தன.

இந்நிலையில் தீவிரவா தத்தைத் தோற்கடித்த இலங் கையின் அனுபவங்கள் என்ற தலைப்பில் இந்த ஆண்டும் போர்க் கருத்தரங்கை நடத்தப் போவதாக லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை இராணுவத்தினருக்கு சீனா, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் பயிற்சி வசதிகளை அதிகரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (பா)


A/L - அரசியல்
வலிமேற்கில் அரசியலுக்கு
SUBRA (14) - சித்தன்கேணி
2014 ஆரம்பம் ஜனவரி 5
2012 - Paper Class
2013 - புதிய பிரிவு ஆரம்பம்
K.சுகாஷ் (LLB)


## பெறுபேற்...

அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டபோது ஏற்பட்ட குளறுபடிக்கான முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குளறுபடிகள் தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகள் மூலம் பிரதான காரணம் கண்டறியப்படும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (பா)


A/L 2014 கலை வர்த்தகப்பிரிவு
கல்வியியலில் ஆழிய பட்டப்போம்...
அனுமதியை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
ஆரம்பம்: ஜனவரி 07 காலை 8.00
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

COMPUTER CLASSES
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY
Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)
NORTH LEAD EDUCATIONAL CENTER
No.328, Stanly Raod, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460


## ஏற்க முடியாத தீர்...

பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகளைவிட இவர்கள் அடம்பிடிக்கிறார்கள் என்று கூறுகிறார். இதில் மக்கள் தான் உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஒருபோதும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக எந்தவொரு தீர்வையும் ஏற்கமாட்டோம். ஏற்க முடியாத தீர்வொன்றை எவரும் எம்மீது திணிக்க முடியாது.

ஐ.நாவின் மனித உரிமை தொடர்பாக நடந்த கூட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து, அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் எவ்வித மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை என உண்மைக்கு மாறான அறிக்கை சமர்ப்பித்தனர்.

இந்த அறிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைத்துலக சட்ட நிபுணர்களின் உதவியுடன் 24 மணி நேரத்திற்குள் உண்மை நிலையின்னை வெளிப்படுத்தியது. இதன் காரணமாக அரசாங்கத்தையும் நாட்டையும் காட்டிக்கொடுப்பவர்கள் என எம்மீது பேரினவாதிகள் குற்றம் சுமத்தினார்கள்.

அதற்கு பதிலளித்த எமது தலைவர் சம்பந்தன் ஐயா, உங்கள் அறிக்கையில் உள்ள உண்மைகள் என்ன? எமது அறிக்கையில் உள்ள பொய்கள் என்ன? என வினா எழுப்பியபோது அவர்களால் ஒன்றும் கூற முடியவில்லை.

2009இல் முள்ளிவாய்க்காலில் தமிழர்களின் ஆயுத போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஐ.நா. செயலாளரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கூட்டாக நாட்டு மக்களின் ஜனநாயக விழுமியங்கள் பேணப்படவேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார்கள். இதன் பிரகாரம் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

அந்தப் பேச்சுவார்த்தையில் அரசு, தரப்பு வடகிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரம் தர முடியாது என அடம்பிடிக்கிறது, ஆனால் நாம் இவையில்லாத தீர்வை ஒரு போதும் ஏற்கப்போவதில்லை என்பதை தெளிவாக இறுதியாக நடைபெற்ற பேச்சு வார்த்தையில் கூட தெளிவுபடுத்தியுள்ளோம். இந்த பேச்சுவார்த் தையை அரசாங்கம் விரும்பவில்லை. சர்வதேச சமூகத்தின் அழுத் தம் காரணமாகவே எம்முடன் பேசுகிறது என மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தார். (பா)


CHEMISTRY COURT
80, ARASADY ROAD, JAFFNA
இரசாயனவியல்
2014 A/L
தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்
By: RAJAH
ஆரம்பம் : 06.01.2012 நேரம் : 9.00 am
(C-5422)

A/L - 2014
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:
ஜனவரி – 7
காலை 9.00 மணி
DMI Jaffna


## குழந்தையை பணயம்...

கொள்ளையர் குழு வீட்டில் உள்ள பணத்தையும் உடைமைகளையும் தருமாறு 2 மாத கைக்குழந்தையின் உயிரைப் பணயம் வைத்து அச்சுறுத்தியுள்ளனர். பணம் தர மறுத்தால் கைக் குழந்தையை வெட்டிக் கொலை செய்வோம் என அச்சுறுத்தியுள்ளனர்.

மேலும் வங்கி ஏ.ரி.எம் அட்டை மூலம் நேற்றுமாலை எடுத்து வந்த பணம் எங்கே? எனவும் கொள்ளையர்கள் மிரட்டியுள்ளனர். கைக் குழந்தையின் உயிரை காப்பாற்றுவதற்காக குழந்தையின் தாயார் வீட்டில் உள்ள பணத்தையும் உடைமைகளையும் கொடுத் துள்ளார்.

இதனை அடுத்து கைக்குழந்தையின் தலையில் வைக்கப்பட்டிருந்த கூரிய ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு கொள்ளையர்கள் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆட்டோவில் வந்த 6 பேர் கொண்ட கொள்ளையர் குழு இந்த கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாகவும் மூவர் வீட்டுக்குள் உள் நுழைந்து இருந்தனர். மற்றைய மூவர் வீட்டுக்கு வெளியில் ஆட்டோவில் காத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீட்டிற்குள் நுழைந்த கொள்ளையர்கள் மூவரும் 20 தொடக்கம் 22 வயதிற்கு உட்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா-11)


தொழிற் பயிற்சிகள்
வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் தொழில்நுட்பத் துறையில் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கேற்றவாறு பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
- Mobile Phone Repairing
- Soft ware, Hard ware — காலம் : 3 மாதம்
- றேடியோ, ரெலிவிசன், DVD Repairing சகல இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் — காலம் : 10 மாதம்
- எலக்றிக்கல் வயறிங்
  வீட்டு மின்சுற்று, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சிளிக்கப்படும் — காலம் : 3 மாதம்
- றிவைண்டிங்
  மின்மோட்டார், ரான்ஸ்போமர் வைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும் — காலம் : 5 மாதம்
- ஏயர் கொண்டிசனிங்
  ஏயர் கொண்டிசனிங் திருத்துதல், சேவிஸ் செய்தல், பொருத்துதல் பயிற்சியளிக்கப்படும் — காலம் : 6மாதம்
சகல பயிற்சிகளும் சனி, ஞாயிறு நடைபெறும்
Sinhala Class
அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு சிங்களம் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.
ஆசிரியர் : சூரி
வகுப்புக்கள் ஆரம்பம் : 14.01.2012 சனி, 09.01.2012 திங்கள்
விபரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P: 0718561654
கிளை : New Asian Center 56/15 B, ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கியருகில்) யாழ்ப்பாணம். T.P: 0779254078
குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
(7221)

யாழ் நகர் ஆசிரியர்கள் தற்போது சங்கானையிலும்...
றோயல் அக்கடமி
பிரதான வீதி சங்கானை
A/L 2014
ஆரம்பம்: ஜனவரி 05 மாலை 4.00 மணி
வர்த்தகப்பிரிவு
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : பகீரதன்
வணிகக்கல்வி : முரளி
கலைப்பிரிவு
தமிழ் பத்மநாதன்
புவியியல் பாபு
இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
நாடகஅரங்கியலும் றமேஸ்
அளவையியல் E.S.பவன்
அரசியல் சுகாஷ்
வரலாறு R.S.சந்திரன்
ஆங்கிலம் மதன்


## அகதி...

தளர்த்தப்பட்ட இலங்கை, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கை உள்ளிட்ட 4 நாடுகளுக்கான விசா கட்டுப்பாடுகளை இந்தோனேசியா தளர்த்த தீர்மானித்ததை தொடர்ந்து, தமது நாட்டுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம், இந்தோனேசிய சட்ட மற்றும் மனிதவுரிமைகள் அமைச்சிடம் பேசியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை, பாகிஸ்தான், ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான விசாகட்டப்பாடுகளை இந்தோனேசியா தளர்த்த தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)


வீடு விற்பனைக்கு
யாழ்.பல்கலைக்கழகம் - பிரபல பாடசாலைகள் - வைத்தியசாலைகளுக்குச் சமீபமாக பருத்தித்துறை வீதி, பலாலி வீதி என்பவற்றிற்கு அருகாமையில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தகவல்களுக்கு :- 077 8767947
1/131, 2ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(7217)

TYPE SETTING
பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள், மாணவர் கையேடு, பரீட்சை வினாத்தாள் மற்றும் பக்கவடிவமைப்புக்களும் கணனி மூலம் நியாயமான விலையில் நவீன தரத்துடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு.
NORTH LEAD
Photocopy- 3/= Laser Print - 5/=
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

பொருளியல்
S. வரதராஜன் B.A(Hons)
ஆரம்பம் : ஜனவரி 05
A/L 2014 பி.ப 4.00 மணி
Day Class பி.ப 1.00 மணி
றோயல் அக்கடமி
பிரதான வீதி சங்கானை.

A/L 2014 கலை வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00
அனுமதியை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோவில் அருகாமை)

வேலைக்கு ஆட்கள் தேவை (3)
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
லைடன் புடைவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP: 021 222 2381
(C-5362)

Mullai New Science Academy
முல்லை நியூ சயன்ஸ் அக்கடமி
செல்லத்துரை விதானையார் ஒழுங்கை, தண்ணீரூற்று -முள்ளியவளை
0779354703
2014 A/L
கணித விஞ்ஞானப் பிரிவு
Physics :-எஸ்.தவபாலன்
Chemistry :-எஸ்.சண்
Biology :-எஸ்.செல்வநேசன்
:-கே.யோதிபிரகாஸ்
Com. Maths :-எஸ்.மணிவண்ணன்
ஆரம்பம் :- 05.01.2012
வியாழன் (8.00A.m)
(7210)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.